# புதன், வெள்ளிக்கு கலங்களை அமெரிக்கா அனுப்பும்!


Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily


தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 168
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 13 ஜமா. அவ் 24 புதன்கிழமை [29-7-70]



அல்கத்தீன் பைப்புகள்
அன்டன் P V.C.
பைப்புகள்
கல்வனைஸ்ட் பைப்புகள்
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130


போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.


வாஷிங்டன், ஜூலை 28

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிநிலையம், புதன், வெள்ளி கிரகங்களுக்கு ஆளில்லாத விண்வெளிக் கலங்களை அனுப்பவுள்ளது. 1974-ம் ஆண்டில் இந்தக் கலங்கள் செலுத்தப்படவிருப்பதாக இன்று தெரிவிக்கப்பட்டது.

சூரியகிரகத்துக்கு அண்மையிலுள்ளது புதன் கோளம். புதன் கோளம் 3 கோடி 90 லட்சம் மைல் தொலைவிலுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிநிலையம் இதற்கான ஏற்பாடுகளை இப்போதிருந்தே செய்துவருகிறது. வாஷிங்டனில் இதுசம்பந்தமான தகவல்கள் இன்று தெரிவிக்கப்பட்டன.

## சண்டிலிப்பாய் கொலைவழக்கு எதிரிகள் மூவரும் விடுதலை

கொழும்பு, செவ்வாய்

சண்டிலிப்பாய் கொலை வழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு கொழும்பு அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டி. பி. நிசங்கா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1968-ம் ஆண்டு மே மாதம் 20-ம் திகதி சண்டிலிப்பாயில் கணபதிப்பிள்ளை தம்பிஐயாவை சுட்டுக் கொலை செய்ததாகவும், அதேசமயம் கனகசபை குணரத்தினம் என்பவரை துப்பாக்கியால்சுட்டு கொலை செய்ய முயற்சித்ததாகவும், சங்கானையைச் சேர்ந்த தவசி செல்வராசா, பூதன் தங்கராசா, ஆறுமுகம் தேவராசா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இன்று காலை நீதியரசர் நிசங்கா தொகுப்புரை நிகழ்த்தினர். இதன்பின் ஜூரி சபையினர் தனிமையில் கூடி சுமார் 1 மணி நேரம் ஆலோசனை செய்தபின் முடிவை தெரிவித்தனர்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் என். சத்தியேந்திரா, வழக்கறிஞர்கள் குமாரலிங்கம், சிவலோகநாதன் ஆகியோரின் உதவியுடனும், வழக்கறிஞர் எஸ். செந்தில்நாதனின் அனுசரணையுடனும் ஆஜரானர். முடிக்குரியதரப்பில் அட்வகேட் றைன் பெர்ணுண்டோ ஆஜரானர்.

## 'இன்றைய சந்தர்ப்பத்தை தமிழர்பயன்படுத்தவேண்டும்'

### புங்குடுதீவில்சுதந்திரக்கட்சிப்பிரமுகர்

ஊரதீவு, செவ்வாய்

''இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தம் உரிமைகளைப்பெறுவதற்குத் தேசிய ரீதியில் இணையவேண்டும். சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதன் மூலமே தமிழ் பேசும் மக்கள் சமத்துவத்துடன்வாழலாம். இதை விடுத்து வகுப்புவாதம் பேசுவதால் எந்தவித மானபிரயோசனமும்இல்லை. இன்றைக்கு மலர்ந்துள்ள சிங்கள-தமிழ் நல்லுணர்வு பேணும் நற்சந்தர்ப்பத்தை தமிழ்மக்கள் நன்கு பயன்படுத்தவேண்டும்''

வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு எம். துரைராசா, புங்குடுதீவில் கட்சிக்கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கூட்டத்துக்கு வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலு தலைமை வகித்தார். கலாசார உதவியமைச்சர் திரு சோமவீர சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கிளைத் தலைவராக வழக்கறிஞர் ப. கதிரவேலுவும், உபதலைவராக புங்குடுதீவு கிராம சபைத் தலைவர் கா. மதியாபரணமும், செயலாளராக திரு. மு. பொன்னம்பலமும், தனதிகாரியாக திரு இராமலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## பாரபட்சம் காட்டினர்

## மகாஜன சம்பத சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட மகாஜனசம்பத சுவீப்முடிவுகள் வருமாறு;

1-வது பரிசு
01[illegible] 001310 ரூ 77,620

2-வது பரிசு
07 Y 000679 ரூ. 77,620

3-வது பரிசு
09 T 001534 ரூ 77,620

[illegible] ரூபா 388-10 சதம் பரிசுபெறும் டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 05S 000882 | 08Y 001802 |
| 10M 000438 | 06C 001890 |
| 02Q 001014 | 13T 001075 |
| 13R 001933 | 08N 0[illegible]83 |
| 07X 000844 | 12Z 0[illegible]27 |
| 01S 001577 | 11M 001889 |
| 14N 000616 | 12Z 000813 |
| 06R 000070 | 05C 001380 |
| 14P 001074 | 06G 000987 |
| 07I 000190 | 10A 00[illegible]68 |
| 03V 000614 | 08J 00[illegible]85 |
| 04B 001126 | 15Y 001380 |

## இன்று

யாழ்ப்பாணம் புதன்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் சுவாமி தேவஸ்தானத்தில் 3ம் திருவிழாவான இன்று மாலை 6 மணி 7-30 மணிவரை திருப்பூங்குடி திரு வி க ஆறுமுகம் ''தெய்வானை திருமணம்'' என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவர். இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் சுவாமி அன்னவாகனத்தில் வீதிவலம் வருதலும், இரவு 8-15 - 9-45 மணி வரை திருவி, டி சிவசுப்பிரமணியம் அவர்களின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெறும்.

— —

## அரசியல் நிர்ணய சபை நகல் பத்திரம்

கோட்டை புதன்

மக்கள் பிரதிநிதிகள் சபை இன்று காலை பத்துமணிக்கு கூடும் போது அரசியல் அமைப்பு அலுவலகதிட்டம் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா அரசியல் நிர்ணசபையை பற்றிய நகல் பத்திரத்தைச்சமர்ப்பிப்பார்

செயலாளர் துணைச்செயலாளர் ஆகியோரும் இன்று நியமிக்கப்படுவார்கள்.

## விவசாயப்படை கலைக்கப்பட்டதால் வேலை தடை

### விவசாய இணைப்புக்குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபம்

(நமது நிருபர் கு. வி. மகாலிங்கம்)

யாழ்ப்பாணம், புதன்

'விஸ்வமடு விவசாயப் படை கலைக்கப்பட்டு, இராணுவத்தினர் பொறுப் பேற்றதன் காரணமாக, நீர்ப்பாசன இலாகாவினுல், குறிப்பிடப்பட்ட வேலைகள் தடைப் பட்டுள்ளன, இதனுல் பல விவசாயத் திட்டங்கள் கைவிடப்படும் நிலைக்குவந்துள்ளன'.

யாழ்ப்பாணம் கச்சேரியில் நடந்த விவசாய இணைப்பு குழு கூட்டத்தில், காணி அதிகாரி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு ஜே எம் சபாசத்தினம் இக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

நீர்ப்பாசன இலாகாவினுல்குறிப்பிடப்படும் வேலைகளை, விவசாயப் படையினர் செய்வார்கள் என காணி அமைச்சர் ஏற்கனவே அறிவித்திருந்தாரென்றும், தற்போது விவசாயப்படை கலைக்கப்பட்டு விட்டதாகவும், இதனுல் விஸ்வமடு, இடைக்காடு அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்படும் என்றும் அவர் கூறினர்.

இக் கூட்டத்திற்கு, கிளிநொச்சி எம் பி திரு. வி. ஆனந்தசங்கரி ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் க. பொ இரத்தினம், மற்றும் விவசாய, நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தர்களும், காணி அபிவிருத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

— —

## சீயாக்காய் மூடைகள் கைப்பற்றப்பட்டன

வல்வெட்டித்துறை, செவ்வாய்

வல்வெட்டித்துறைப் பொலிசார் உடுப்பிட்டியிலுள்ள வீடொன்றில் 45 சீயாக்காய் மூடைகளைக் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் அவ்வீட்டிலுள்ள நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர் மூடைகளும் கைப்பற்றப்பட்ட நபரும் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

## அடுத்த மூன்று ஆண்டுகளில்

## 5 லட்சம் இளைஞர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணும் நற்சந்தர்ப்பத்தை தமிழ்மக்கள் நன்கு பயன் படுத்தவேண்டும்''

வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு எம். துரைராசா, புங் ...

... மதியாபரணமும், செயலாளராக திரு. மு. பொன்னம்பலமும், தனதிகாரியாக திரு இராமலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

... ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

## பாரபட்சம் காட்டினர்

### கல்வி அமைச்சருக்கு 3 மாணவர் புகார்

மாவிட்டபுரம், வெள்ளி

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்கள் தம்மை உயர்கல்வி பெற வெளிநாட்டுக்கு அனுப்பவில்லை என கல்வி மந்திரியிடம் புகார் செய்து ஒரு மகஜரை அனுப்பியுள்ளனர்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் பயிலும் இம் மூன்று மாணவர்களும் தாம் வகுப்பில் முதலாவதாக இருக்கவும் ஆசிரியர்கள் தங்களை வெளிநாட்டில் உயர் கல்விபெற அனுப்பாது வேறு மாணவர்களை அனுப்ப இடம் அளித்துள்ளனர் என அம் மகஜரில் குற்றம் சாட்டியுளனர்.

இம் மகஜரின் பிரதிகள் உதவி கல்வி மந்திரி, வடபகுதி கல்வி வித்தியாதிபதி தொழிற்சங்கத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## சைக்கிளில் சென்றவர் பஸ்ஸுக்குப் பலி

இமையாணன், புதன்

சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் பஸ்விபத்தில் ஸ்தலத்திலேயே பலியானார். இச்சம்பவம் அச்சுவேலியில் நடைபெற்றது.

விபத்தில் பலியானவர் ஆவரங்காலைச் சேர்ந்த சின்னையா பொன்னம்பலம் என அடையாளம் காணப்பட்டது. இறந்தவர், சைக்கிளில் ஆவரங்காலிலிருந்து அச்சுவேலிக்குச் சென்று கொண்டிருந்ததாகவும், அதே திசையில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி பஸ் சென்றதாகவும் தெரியவந்தது.

விபத்தில் பலியானவர் நேற்றுக் காலையில் கார் ஒன்றின் மூலம் சாவகச்சேரி சென்று வெங்காயம் விற்றுவிட்டுவந்ததாகவும், வீடு வந்ததும், காரில் மறந்துபோய் விட்டுவந்த பொருட்களை எடுப்பதற்காக சைக்கிள்ஒன்றில் அச்சுவேலிக்குச் சென்றதாகவும் அச்சமயமே இவ்விபத்து நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

காலஞ் சென்றவருக்கு சுமார் 50 வயதிருக்குமென்றும், மணமாகாத ஒருபெண் உட்பட 3 பெண்பிள்ளைகளும் 2 ஆண்பிள்ளைகளும் இவருக்கு உண்டென்றும் கூறப்பட்டது.

அச்சுவேலிப் பொலிஸார் பஸ் சாரதியைக் கைதுசெய்துள்ளனர் விசாரணை நடைபெறுகிறது.

| | |
|---|---|
| 01[illegible] 001310 | ரூ. 77,620 |

2-வது பரிசு

| | |
|---|---|
| 07 Y 000679 | ரூ. 77,620 |

3-வது பரிசு

| | |
|---|---|
| 09 T 001534 | ரூ. 77,620 |

[illegible] ரூபா 388-10 சதம் பரிசுபெறும் டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 03 A 001609 | 06 F 000027 |
| 06 K 001922 | 13 E 009138 |
| 03B 001813 | 12W 000549 |
| 06N 000610 | 15Z 000562 |
| 16F 000156 | 11 J 001826 |
| 02E 001729 | 04A 001459 |
| 10E 000057 | 12A 001963 |
| 04O 001521 | 16R o00978 |
| 06X 000369 | 13J 000427 |
| 08E 000659 | 14Y 000790 |
| 05A 001644 | 06G 001987 |
| 07L 001936 | 06U 000088 |
| 02W 000093 | 02R 000984 |
| 11W 000814 | 14T 001178 |
| 12J 001822 | 12J 000756 |

05Y 000129

| | |
|---|---|
| 14S 001744 | 06L 000532 |
| 12A 001565 | 10H 001702 |
| 11H 000583 | 10P 000075 |
| 02V 000001 | 08Y 001099 |
| 14W 001781 | 03A 001367 |
| 07P 000156 | 15R 000784 |
| 10U 000438 | 02R 001594 |
| 09Z 000306 | 02A 000323 |
| 01M 001493 | 12Y 000733 |
| 03P 000259 | 05D 000457 |
| 13R 000726 | 02J 000373 |
| 03Z 000895 | 05R 000875 |
| 15P 001986 | 06U 000837 |
| 01O 001075 | 04B 000052 |
| 16R 000659 | 03J 000540 |
| 02R 001952 | 15D 001944 |
| 05X 000668 | 11Q 001928 |
| 06H 001967 | 03R 001466 |
| 12A 000904 | 13V 001171 |
| 13B 000473 | 05B 001652 |
| 06X 001960 | 12C 001082 |
| 11M 000298 | 06K 001960 |
| 09Q 000035 | 04C 000962 |
| 16B 001839 | 08P 000830 |

16 H 001759

| | |
|---|---|
| 08H 001313 | 10A 000082 |
| 11A 000949 | 08H 001855 |
| 01N 000799 | 03O 000511 |
| 06N 001816 | 15G 001550 |
| 03R 001330 | 04K 000382 |

| | |
|---|---|
| 01S 001577 | 11M 001889 |
| 14N 000616 | 12Z 000813 |
| 06R 000070 | 05C 001380 |
| 14P 001074 | 06G 000987 |
| 07J 000190 | 10A 00[illegible]68 |
| 03V 000614 | 08J 00[illegible]85 |
| 04B 001126 | 15Y 001380 |
| 13Z 000016 | 14A 001180 |
| 01Z 001047 | 12P 000833 |
| 13V 001711 | 10A 000520 |

05 B 000879

| | |
|---|---|
| 09G 000810 | 04C 001028 |
| 07F 001019 | 03B 001981 |
| 03E 001648 | 09U 000002 |
| 03L 001427 | 08J 000701 |
| 05F 000591 | 06H 001764 |
| 04V 000090 | 02T 001048 |
| 01G 000611 | 02R 001703 |
| 13E 001388 | 07E 000315 |
| 12Z 000169 | 09K 001462 |
| 07N 001165 | 12Y 000408 |
| 05H 001513 | 14Z 000387 |
| 06O 000762 | 06J 001275 |
| 08K 001724 | 13S 000877 |
| 07O 001416 | 04L 000595 |
| 16X 000052 | 14F 000399 |
| 14V 000296 | 11E 000056 |
| 07T 001380 | 06W 001184 |
| 04N 000357 | 09A 000414 |
| 05T 000111 | 06S 001640 |
| 04F 001800 | 15Y 001909 |
| 05Z 001248 | 02O 001290 |
| 09W 000328 | 11L 001998 |
| 06F 000771 | 09D 000190 |
| 07D 000451 | 04K 001979 |
| 14F 000451 | 07L 001149 |
| 05V 000419 | 13D 001305 |
| 13X 001713 | 15E 001140 |
| 11B 001933 | 14H 001458 |
| 15E 000138 | 16O 001861 |
| 08G 000501 | 05Q 001671 |
| 11B 000289 | 09C 001911 |
| 12C 000057 | 06O 001271 |
| 13S 001279 | 07H 001832 |
| 10B 001545 | 13W 000845 |
| 11N 001939 | 04Y 000027 |
| 05V 001406 | 10H 001116 |
| 16W 001731 | 03L 000220 |
| 09Z 001667 | 03O 001517 |
| 09Z 000571 | 01S 001975 |

15V 000758

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

அடுத்த மூன்று ஆண்டுகளில்

## 5 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி

### பிரதமர் தலைமையில் இன்று ஆலோசனை

கோட்டை, செவ்.

எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் 5 லட்சம் இளம்சந்ததியினருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுப்பது சம்பந்தமாக அடிப்படைத் திட்டமொன்றை உருவாக்கும் முகமாக அரசாங்கத்தின் முக்கிய 'மூளைகள்' என்று வர்ணிக்கப்படும் பிரமுகர்கள்சிலர் நாளைய தினம்கூடி ஆராயவிருக்கிறார்கள்,

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் தொழில் வேலை வசதித் துறை உப அமைச்சர் திரு. ரத்னேதேசப்பிரியசேனநாயக்க அந்த இலாகாவின் நிரந்தரக்கரியதரிசி திரு ஏ. டி. எஸ். குணசேகர, நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா பொநிர்வாகம். உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்க ஆகியவர்களும் முக்கிய அமைச்சுகளின் நிரந்தரக் காரியதரிசிகளும் இதுசம்பந்தமாக ஆலோசிக்கவிருப்பவர்களில் சிலராவர்.

ஏற்கனவே இருந்த அரசாங்கம் எடுத்த சிலநடவடிக்கைகளையும் எதிர் காலத்தில் வேலை இல்லா திண்டாட்டத்தை ஒழிகக பயன் படுத்த முடியுமா என்பது பற்றியும் இவர்கள் ஆலோசனைகள் நடத்துவார்கள் என்று தெரிகின்றது,

ஒவ்வொரு அமைச்சின் கீழும் இயங்கும் கூட்டுத்தாபனங்கள் காரியாலயங்கள் போன்றவற்றில் எத்தனை பேருக்குப் புதிதாக வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தலாம் எத்தனை இடங்கள் காலியாகவிருக்கின்றன இவைகளும் நிரப்பப்படுவதால் ஏற்படும் செலவுகள் என்ன இந்தச் செலவுகளை சமாளிக்கும் மார்க்கம் என்ன என்பவை போன்ற பிரச்னைகளை நாளையதினம் இவர்கள் ஆராயத்தலைப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ், மலையாள மொழிகளில் வரும்

## இந்திய சஞ்சிகைகளுக்கு இலங்கையில் தடை?

கோட்டை, புதன்

இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் தருவிக்கப்படும் ஏராளமான பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றைத் தடைசெய்வதற்குப் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா முடிவுசெய்திருக்கிறாராம். இத்தகவலை தவஸ' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் தருவிக்கப்படும் பத்திரிகை, சஞ்சிகைகள் பெரும்பாலும் தமிழ், மலையாள மொழிகளில் பிரசுரமாயவை.

மாதந்தோறும் இவ்வாறு 463,850 பத்திரிகை, சஞ்சிகைகள் இலங்கைக்குத் தருவிக்கப்படுகின்றனவென்றும் இதனால் 23,96,830 ரூபா மாதந்தோறும் செலவாகின்றதென்றும் அப்பத்திரிகை தெரிவிக்கின்றது

இப்பத்திரிகைகளின் காரணமாக இலங்கையின் அன்னிய செலாவணி வீண் விரயமாவதுடன் இலங்கையின் கலாச்சாரத்திற்கும் பெரும் விழுக்காடு ஏற்படுவதாகவும், இன பேதத்தைப் புகுத்தும் கருத்துக்கொண்டவையாக இருப்பதாகவும் அகில இலங்கை பத்திரிகையாளர் சங்கம் ஓர் அறிக்கை மூலம் தெரிவித்திருப்பதாகவும் அந்தச் செய்தி கூறுகின்றது.

இலங்கையின் சிங்கள கலாச்சாரத்திற்கும், மொழிக்கும் மாத்திரமன்று அந்நிய செலாவணிக்கும் இடையூறு விளைவிக்கும் இந்தியப் பத்திரிகை, சஞ்சிகைகளுக்குத் தடைவிதிக்கப் பிரதம மந்திரி எடுத்துள்ள தீர்மானம் மிகவும் அலங்காரமானதும், ஆசீர்வாதமளிப்பதுமான நடவடிக்கையென்று 'தவஸ' ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருக்கின்றது.

## நாகர்கோயிலில் கண்ணாடித் தொழிற்சாலை

புலோலி, செவ்வாய்

'தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுத்து நாட்டிலே சமாதானம் நிலவ முயற்சிகள் பல எடுத்து வருகிறோம். சகலரதும் மத இன கலாசாரங்களையு பேணிக் காக்க முன்வந்துள்ளோம்.

கிராமம் கிராமமாகச் சிறு கைத்தொழிலை ஏற்படுத்தி உள்ளூர் உற்பத்திக்கு மதிப்பை ஏற்படுத்தி வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க தற்போது வழிவகுத்து வருகிறோம்' என பருத்தித்துறை லங்கா சுதந்திரக் கட்சிக் கிளையினால் அளிக்கப்பட்ட வரவேற்பில் உதவி கலாச்சார அமைச்சர் திரு. சோமவீரசந்திரசிறி குறிப்பிட்டார்.

வல்லிபுரக்கோயில் என்னும் இடத்தில் விரைவில் கண்ணாடித் தொழிற்சாலை அமைத்து அதன் மூலம் வடமராட்சியில் உள்ளமக்களின் வேலையில்லாப் பிரச்னையை தீர்க்க ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும் உதவி அமைச்சர் தெரிவித்தார். கட்சிக்கிளைத் தலைவர் திரு. எஸ் நாகநாதனும் பேசினார்.

மாங்குளம் முக்கொலை வழக்கு

## "என்னை முதலாம் எதிரி வெட்டினார் இரண்டாம் எதிரி வெட்டவில்லை"

—சாட்சி

யாழ்ப்பாணம், புதன்

'வாடியை விட்டு நான் போகும்போது 1-ம் எதிரி வில்லியம் காட்டுக்கத்தியால் வெட்டினார், 2-ம் எதிரி என்னை வெட்டவில்லை. 1-ம் எதிரி முதலில் தலையில்வெட்டினார். பின் காலிலும்கையிலும் வெட்டினார்.'

மாங்குளம் முக்கொலை வழக்கில் சாட்சியமளித்த குமாரசாமி சுப்பையா குறுக்கு விசாரணையின்போது மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ எல் எஸ் அலஸ் முன்னிலையில் 3-வது தினமாக விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் மாங்குளத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை 2-ம் தேதி வில்லியம், பியரத்தின ஆகிய இருவரும் செல்லத்துரை. பொன்னையா, பால்ராஜ் ஆகியோரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

குறுக்கு விசாரணையின் போது சுப்பையா மேலும் கூறியதாவது:- செல்லத்துரை நித்திரைக்குப் போன போது வேட்டியும் சேட்டும் அணிந்திருந்தார் பெனியன் போட்டிருந்ததை நான் காணவில்லை.

வழ: வாடியில் யாரிடமாவது டோர்ச் லைற் இருந்ததா? - டோர்ச் லைற் இருந்தது பற்றறி இல்லை

வழ: யாருடைய லைற்? —செல்லத்துரையின்

வழ: அன்று யாராவது டோர்ச்லைற் பாவித்தார்களா? - இல்லை

வழ: பால்ராசை யாராவது தாக்கியதைப் பார்த்தீரா? -இல்லை

வழ: செல்லத்துரையை யாராவது தாக்கியதைப் பார்த்திரா? -இல்லை

வழ: பியரத்ன காட்டுக்கத்தியால் பால்ராசின் கழுத்தை வெட்டியதைக் கண்டீரா? -இல்லை

வழ: பியரத்ன வெட்டியதைக் கண்டதாகச் சொன்னால் அது பொய்? நான் காணவில்லை

வழ: இன்ஸ்பெக்டர் இராமநாதனிடம் பியரத்ன காட்டுக்கத்தியால் பால்ராசின் கழுத்தை வெட்டியதைக் கண்டதாகச் சொன்னீரா? —இல்லை

வழ: செல்லத்துரையை வில்லியம் வெட்டியதைப் பார்த்தீரா? - இல்லை

வழ: அவர் கோடரியால் வெட்டியதைப் பார்க்கவில்லை? -இல்லை

வழ: இன்ஸ்பெக்டரிடம் வில்லியம் கோடரியால் செல்லத்துரையின் கழுத்தை வெட்டியதைக் கண்டேன் என்றீரா? -இலலை

வழ: வாடியை விட்டுப் பொன்னையா எப்பொழுது ஓடினார்? அதிகாலை இரண்டு மணிக்கு

வழ: பியரத்ன பால்ராசாவைவெட்டும்போது, வில்லியம் செல்லத்துரையை வெட்டியபோது பொன்னையா வெளியில் ஓடினாரா? -இலலை

(4-ம்பக்கம்பார்க்க)

## தைபின் அம்மையாருக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு

கொழும்பு, செவ்.

தென்வியட்னாம் புரட்சி அரசின் வெளிநாட்டமைச்சர் தைபின் அம்மையார் இன்று மகாதேசாதிபதியை சந்திப்பதற்காக இராணி மாளிகைக்கு வந்தபோது ஏராளமானமக்கள் குழுமியிருந்து ஆரவாரம் செய்து அவரை வரவேற்றார்கள்.

தைபின் அம்மையார் இங்கு சென்றவிடமெல்லாம் அன்புடன் வரவேற்கப்பட்டார்.

தைபின் அம்மையார்மகாதேசாதிபதியையும், செனட் சபைத் தலைவரையும் சந்தித்து மரியாதை தெரிவித்துக் கொண்டார். நிதிஅமைச்சரையும் சந்தித்தார்.

இந்தியாவில் போலன்றி தைபின் அம்மையாருக்கு இங்கு சென்றவிடமெல்லாம் அமோக வரவேற்பளிக்கப்பட்டதாக அவதானிகள்கூறினார்கள். இந்தியாவில் பின் அம்மையாருக்கு சிலஇடங்களில்கறுப்புக்கொடிகள் காட்டப்பட்டதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். (சி.பி.ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் நான்கு பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. லான்ட் இன்வெஸ்ட் மென்ஸ், 6, பிரதானவிதி, யாழ்ப்பாணம். 3014

C. E. 3395 லொறி V. 8. செவலட் எஞ்சின் நல்ல நிலைமையில் ஓடிக்கொண்டிருக்கிறது (கம்பிக்கூடாரம்) நேரில் வந்து பார்த்து விலை கேட்கவும். மேலதிக எஞ்சின் ஒன்றும் கியர் பொக்ஸ் ஒன்றும் இருக்கிறது. பார்வை இடும் இடம் P. M. நாகரெட்ணம் செட்டியார், நிர் 15/17, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 567. 3018

காணி:

யாழ்ப்பாணம், புங்கங்குளம், கண்டி ரோட் சந்திக்கும், புகையிரதநிலையத்திற்கும் இடையில் மூன்று பரப்பு வெற்று நிலம் லான்ட் இன்வெஸ் மென்ட், 6, பிரதானவிதி, யாழ்ப்பாணம். 3021

நாரந்தனை-பண்ணை வீதியில் உதருப்பிட்டி நெற்பரப்பு 15 விஸ்திரணம் கொண்ட ஆதனம் விற்பனைக்குண்டு. வேண்டுவோர் கரம்பன் சி. கந்தையா நொத்தாரிஸ் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 3017

### விற்பனைக்கு

நெற்காணி

நெடுங்கேணியில் பெரிய குளத்திற்கடியில் 8 ஏக்கர் சிறு போகம், காலபோகம் செய்யக் கூடிய நெற்காணி. மெயின் வீதி ஓரமாக விற்பனைக்குண்டு ரூபா 2500/-க்கு மேல் கொடுக்கப்படும் திருமதி S. H. டட்லி, ஆணைக்குட்டிவிலா, உடுவில். சுன்னுகம். 3024

## அமைச்சருக்கு வரவேற்பு

கொழும்புத்துறை, செவ். வடபகுதிக்கு விஜயஞ் செய்யவிருக்கும் தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்கு வரவேற்பளிக்க கொழும்புத்துறை வாலிப முன்னணிக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

### தேவை

யாழ்ப்பாணம் - கட்டிடப் பகுதி மேற்பார்வையாளரும், அப்பகுதியில் வேலை பழக விரும்புவோரும் ஆங்கில அறிவுள்ள ஆண்களும், கட்டிடப் பகுதி படம் வரைந்து கணக்குப் போடுவோரும் அப்பகுதியில் வேலை பழக விரும்புவோர் G. C. E. ஆங்கிலம், கணக்குப் பாடமுள்ள ஆண்களும், பெண்களும் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 3023, 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3023

நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் லையிற்று எஞ்சின் (இயக்குனர்) றைவர் ஒருவர் தேவை. வயரிங் வேலையும் தெரிந்தவராயும் மெக்கானிக்குத் தெரிந்தவராயும் இருத்தல் உத்தமம். தகுதியின்படி சம்பளம் கொடுக்கப்படும் விரும்பியவர்கள் மேல்காட்டிய விலாசக் காரியதரிசிக்கு 15-8-70 திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். நற்சான்றுகள் இருந்தால் பத்திரத்துடன் அனுப்பவும். கா. ஆறுமுகம், கௌரவ காரியதரிசி 3025

யாழ்ப்பாண ஸ்தாபனமொன்றிற்கு மனேஜர் வேலைக்கும், கசியர் வேலைக்கும் G. C. E. ஆங்கிலம், தட்டெழுத்து பாடங்களுடன் பிணைப்பணம் கட்டக்கூடியவர்களும், வெளிச் சேவையாளர் வேலைக்கு ஆங்கில அறிவுடையவர்களும் தேவை. ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3022, 'ஈழநாடு', மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 3022

## இ. போ. ச. புதிய கட்டிடத் திறப்பு விழா

பருத்தித்துறை, செவ்வாய்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் 1 1/2 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரண்டு மாடிக் கட்டிடம் ஆகஸ்ட் முதல் வாரத்தில் திறந்துவைக்கப்படும்.

டிப்போவின் பொறியியற் பகுதி ஊழியராகக் கடமையாற்றிய திரு. நா. சுப்பிரமணியம் இக்கட்டிடத்தைத் திறந்துவைப்பார்.

இவ்வைபவத்தில் பிரதான தொழிற்சங்கத் தலைவர்களும் இ. போ. ச. தலைவர் திரு. அனில்முனசிங்காவும் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரிகிறது.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

யோகபுரம் மேற்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு நெற் களஞ்சியக் கட்டிடம் கட்டுவதற்கு பதிவு செய்யப்பட்ட அரசாங்க ஒப்பந்தகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்டிடத்தின் மாதிரிப் படத்தையும் மற்றும் விபரங்களையும் சங்க காரியாலயத்தில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 5 8-70ந் திகதிக்கு முன்னதாக கீழ்க் காணும் முகவரிக்குபதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

பொ. சின்னத்துரை,
காரியதரிசி,
யோகபுரம் மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
2380 துணுக்காய்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 29—7—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-00 முத்திநெறி, 6-30 விவசாயப்பிரச்னை, 6-45 வீட்டு வைத்தியம், 7-00 வாத்தியஇசை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.

## 'இலவச மருந்தும் அனுமானமும் தருக'

சுழிபுரம், செவ்வாய்

''ஆயுள்வேத மருந்துகளுடன், அவற்றைப்பாவிக்க வைத்தியர் கூறும் அனுமானங்களான தேன், சீனி,

# யாழ். நகரில் 'றகர்' விளையாட்டுச் சங்கம்

## பாடசாலை மாணவருக்கு 'றகர்' பயிற்சி அளிக்கும்

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பிலும், மற்றைய மாகாணங்களிலும் பிரபல்யம் அடைந்து வரும் ''றகர்'' விளையாட்டு தற்போது யாழ். நகரிலும் நடைபெற விருக்கின்றது.

சகல விளையாட்டுகளிலும் பிரபல்யம் அடைந்துள்ள யாழ். மாவட்டத்தில் ''றகர்'' விளையாட்டு இல்லாதது விளையாட்டுத்துறையில் பெரும்குறையாகவே இருந்து வந்தது இக்குறையைப் போக்குவதற்கு, பல பெரியார்களின் ஒத்துழைப்புடன், அன்மையில் யாழ். நகரில் முதன் முதலாக ''றகர்விளையாட்டுச்சங்கம்'' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு, பின்வருவோர், இச்சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஐ. எம். இஸ்மாயில், உப தலைவர்கள்: திருவாளர்கள் ஆர். சுந்தரலிங்கம், வேணன் சண்முகம், காரியதரிசி: திரு. எஸ். சிவேந்திரன் உபகாரியதரிசி: திரு. கே அரியராசா, தனாதிகாரி: திரு வி. கிருபராசா

9பேர்கொண்ட நிர்வாசக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

மேற்படி சங்கம் முதன் முதலாக யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே ''றகர்'' விளையாட்டை அறிமுகம் செய்ய விருக்கின்றது.

அடுத்த வாரத்திலிருந்து பாடசாலை மாணவர்களுக்கு கோட்டை மைதானத்தில் வாரத்தில் மூன்று நாட்களுக்கு ''றகர்'' விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்படும் என்றும், பின் பாடசாலைகளிடையே ஒருசுற்றுப் போட்டியை நடத்துவதென்றும், இச்சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு இப்பொழுதே யாழ். மாவட்டத்திலுள்ள 9 பாடசாலைகள் விண்ணப்பித்திருப்பதாகவும் இச்சங்கத்தின் காரியதரிசியும், யாழ். பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டருமான எஸ். சிவேந்திரன் நமது நிருபரிடம் கூறினர். (தே. நி)

## ஆங்கில தினப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்.

வட்டுக்கோட்டை வட்டார ஆங்கிலதினப்போட்டி அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் நடைபெற்றது மேற்படி ஆங்கில தினப்போட்டியில் சங்கானை மகாவித்தியாலயம் ஐந்து முதல்பரிசுகளைப் பெற்றுக்கொண்டது,

மேற்படி ஆங்கில தினப் போட்டியில் சங்கானை மகாவித்தியாலயத்தினர் பெற்ற பரிசு விபரம் பின்வருமாறு:

கீழ்ப்பிரிவு: பாஒதல்: செல்வி எஸ். ரஞ்சினிதேவி, 1-ம் பரிசு: ஆண்கள்: செல்வன் பி. ஸ்ரீதரன் 1-ம்பரிசு.

வாசிப்பு: பெண்கள்- செல்வி. எஸ். ரஞ்சினிதேவி 1-ம் பரிசு, ஆண்கள்: செல்வன் [illegible] ஸ்ரீகெங்கன் 2-ம் பரிசு.

யாழ். — பாக். ஹொக்கிப் போட்டியில்

## பாகிஸ்தான் கோஷ்டிக்கு அமோக வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

கிழக்குப் பாகிஸ்தான் பாடசாலைத் தெரிவு ஹொக்கிக் கோஷ்டிக்கும், யாழ். மாவட்டப் பாடசாலைத் தெரிவுக் ஹொக்கிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான ஹொக்கிப் போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாக முன் இரு கோஷ்டி வீரர்களையும், யாழ்ப்பாண ஹொக்கி விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. சி. ராசதுரை; இலங்கை இளைஞர் ஹொக்கிக் கோஷ்டியின் தெரிவுக் குழுத் தலைவர் டாக்டர் ஜே. சி. துரைசிங்கத்துக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

மேற்படி இரு கோஷ்டியினருக்குமிடையில், இடைவேளைவரை நடைபெற்ற ஆட்டம் மிகவும் சுவையாகவும், உக்கிரமாகவும் இருந்தது, யாழ். கோஷ்டியின் கோல்காப்பு வீரர் சிவராசா எதிர்க் கோஷ்டியினரால் பலமுறை கோல்கள் போட எடுத்த முயற்சிகளை முறியடித்து, ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். இடைவேளைவரை இரு கோஷ்டியினருமே கோல்கள் எதையும் போடவில்லை.

இடைவேளையின் பின்ஆட்டம் தொடங்கி ஐந்து நிமிடங்களின் பின் பாகிஸ்தான் கோஷ்டியின் இடது உள்முன்னணி வீரர் சாமிஹல்லா மின்னல்வேகத்தில் முதலாவது கோலைப் போட்டார். இதன் பின் பாகிஸ்தான் கோஷ்டியினர் மிகவும் வேகமாகவே முன்னேறிய வண்ணம் கோல்களைப் போடத் தொடங்கினர். இக் கோஷ்டியினரின் வேகமான முன்னேற்றத்தை யாழ். கோஷ்டியினரால் தடுத்து நிறுத்த முடியாது சோர்வடைந்து விட்டனர் பாகிஸ்தான் கோஷ்டியின் முன்னணி வீரர்களான அஸிர் மேசர், காலிற்பட் ஆகிய இரு வீரர்களும் முறையே 3, 2 கோல்களைப் போட்டனர்

இப் போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டியின் வீரர்களின் விளையாட்டு பார்வையாளர்களுக்குப் பெருவிருந்தாகவே இருந்தது. இவர்கள் பந்தை நிறுத்துவதிலும், மிகவேகமாக ஓடும்போது பந்தைத் தமது வீரர்களிடம் தட்டிக் கொடுப்பதிலும், எதிர்க் கோஷ்டி வீரர்களுக்கூடாக பந்தை மிகச் சாதுரியமாகக் கொண்டு செல்வதிலும், மிகவும் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

யாழ். கோஷ்டி வீரர்கள் திறமையாக விளையாடிய போதிலும், இவர்களுக்கு உடலில் போதிய வலிமையும், விளையாட்டில் கூடிய பயிற்சியின்மையுமே இவர்களின் தோல்விக்கு முக்கிய காரணமாக இருப்பதாக, பாகிஸ்தான் கோஷ்டியின் மனேஜர் தெரிவித்தார்.

யாழ். கோஷ்டியின் காப்டன் ஆர். மகேந்திரனின் விளையாட்டும், பின்னணி வீரர்களான சண்முகா, சந்தரலிங்கம் ஆகியோரின் விளையாட்டு சிறப்பாகக் காணப்பட்டது.

இந்தப் போட்டியின் முடிவில், பாகிஸ்தான் கோஷ்டி 6—0 கோல்களால், யாழ். தெரிவுக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு, திருவாளர்கள் பூபாலும், அரியராசாவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள். (தே. நி)

வவனிக்குளத்துக்கு

## விநாயகர் ஊர்வலம்

வவனிக்குளம், செவ்

வவனிக்குளத்தைச் சேர்ந்த சிவபுரத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் விநாயகர் ஆலயக் கும்பாபிஷேகத்தை ஆவணிச் சதுர்த்தியிலே நடாத்துவதற்கு வவனிக்குளச் சிவாலயத் திருப்பணிச்சபை தீர்மானித்துள்ளது. வவனியாவில் உருவாக்கிய விநாயகர் விக்கிரகத்தை வவனியாவிலிருந்து சிவபுரத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்ல முடிவு செய்யும் கூட்டம் வவனியா மகாவித்தியாலயத்தில் வவனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. பெருமையினார் தலைமையில் நடைபெற்றது. இறுதி முடிவு பின்னரி எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது

## புதிய நிர்வாகிகள்

வேலணை, செவ்வாய்

வேலணை ஆத்திசூடி பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்க கூட்டத்தில் பின் வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ஐ பொன்னையா (தலைமை ஆசிரியர்) உப தலைவர்: திரு நா நடராசா, செயலாளர்: திரு வி. கந்தசாமி, தனாதிகாரி: திரு. இ நாகராசா மற்றும் 7 நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப் பட்டனர்.

0 0 0

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை பெற்றார் ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போசகர்கள்: கா பொ இரத்தினம்(எம்.பி), திரு மு மயில்வாகனம், தலைவர்: திரு க. காங்கேசு, உப தலைவர்; திரு. பொ கேதாரநாதன், செயலாளர்: திரு ஆ துரைராசா, தனாதிகாரி: திரு அ வைத்திலிங்கம் மற்றும் 15 நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப் பட்டனர்.

உதவி கல்வி மந்திரி

## யாழ். விஜயம் ரத்து

மாவிட்டபுரம், செவ்.

உதவி கல்வி மந்திரியின் யாழ்ப்பாண விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

உதவி கல்விமந்திரியான திரு பி வை துடாவை அடுத்தமாதம் 2ம் திகதி ஆசிரிய சங்கக் கூட்டமொன்றில் கலந்து கொள்ள வடபகுதிக்கு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் இவரின் விஜயம் இறுதி நேரத்தில் ஒத்திப்போடப்பட்டது செப்டம்பர்மாதம் 29ம் திகதிவரை இவர்இங்கு வரலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.


### அறிவித்தல்

யாழ். இந்துமகளிர் கல்லூரியின் பெற்றார் ஆசிரியர் சங்கக்கூட்டம் 7-8-70 அன்று மாலை 5 மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறும். அத்தருணம் குறித்த கல்லூரியின் பெற்றார் ஆசிரியர் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

2387 அதிபர்




ராணி ஜெமினி — சௌகார்ஜானகி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சர் திரு. செல்லையா குமார சூரியருக்கு வரவேற்பளிக்க கொழும்புத்துறை வாலிப முன்னணிக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

தான தொழிற்சங்கத் தலைவர்களும் இ. போ. ச. தலைவர் திரு. அனில்முனசிங்காவும் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரிகிறது.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ் — ஜெயந்தி நடித்த

## இரு கோடுகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் இரு வேடங்களில் பத்மினி - ராகினி - தங்கவேலு நடித்த

## உத்தமபுத்திரன்

(புதிய கொப்பி)


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி ப 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்

★ சௌகார்ஜானகி

★ நாகேஷ் ★ குமாரிசச்சு

சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்

★ கே. பி. சுந்தராம்பாள்

★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

## துணைவன்

கதை வசனம் பாலமுருகன் | சங்கீதம் K.V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

## இலவச மருந்தும் அனுமானமும் தருக'

சுழிபுரம், செவ்வாய் ''ஆயுள்வேத மருந்துகளுடன், அவற்றைப்பாவிக்க வைத்தியர் கூறும் அனுமானங்களான தேன், சீனி, பனங்கட்டி, குடிநீர்சாமான்களையும் இலவசமாகநோயாளிகளுக்குவழங்கவேண்டும்''

இவ்வாறு வழக்கம்பரை தமிழ்மன்றத்தினர் சுழிபுரம் கிராம சபைத் தலைவரிடம் கேட்டுள்ளனர்.

இவ்வாறு கொடுக்கப்படும் மருந்தை அனுமானத்துடன் சேர்த்து வைத்தியசாலையிலேயே நோயாளிகளுக்குக் குடிக்கக் கொடுக்கவேண்டுமென்றும். இந்தகாரியத்தை உடனடியாகச் செய்து சுழிபுரம்கிராமசபை முன்மாதிரியாக விளங்கவேண்டுமென்றும் எடுத்துக்காட்டினர்.

ஸ்ரீ காலிங்கன் இணுவில்

தினசரி 6-30, 9-30 மணி, போயா, பிரிபோயா 2-30

## கலாட்டா கல்யாணம்

நாளை முதல்

சிரித்த முகம்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 6-30, 10-00 மணி

ஜெமினி-சரோஜாதேவி நடித்த

## ஆடிப்பெருக்கு

வெஸ்லிசினிமா

வாணிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரிபோயா, போயா 2-30மணி

சிவாஜி-சாவித்திரி நடித்த

## கர்ணன்

ஈஸ்மன்கலர்- புதியகொப்பி

MANOHARA JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p.m.

Poya-Prepoya 10-30 a.m.

Graig Stevens in

GUNN... Number One

(Strictly for adults)

REGAL JAFFNA

Daily 4 Shows

Kirk Douglas,

Sylva Koscina

in

A LOVELY WAY TO DIE

(Panavision-color)

... 1-ம் பரிசு: ஆண்கள்: செல்வன் பி. ஸ்ரீதரன் 1-ம்பரிசு.

வாசிப்பு: பெண்கள்- செல்வி. எஸ். ரஞ்சினிதேவி 1-ம் பரிசு, ஆண்கள்: செல்வன் ... ஸ்ரீகெங்கன் 2-ம் பரிசு.

எழுத்து: பெண்கள்: செல்வி எஸ். விமலாதேவி 1-ம் பரிசு;

ஆண்கள்: செல்வன் எஸ். சிவலிங்கம் 2-ம் பரிசு.

எழுத்துக்கூட்டல்: 1-ம் பரிசு (பொது) மேற்பிரிவு:

பா ஓதல்: பெண்கள்: செல்வி ஏ. ராணி 2-ம்பரிசு.

வாசிப்பு. பெண்கள். செல்வி ஏ. ராணி 2-ம் பரிசு.

எழுத்துக்கூட்டல்! 2-ம் பரிசு (பொது)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், புதன் நல்லூர், கொழும்புத்துறை அரசாங்க ஆசிரிய கலாசாலைகளின் மெய்வல்லுனர்ப் போட்டி நாளை கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை விளையாட்டு மைதானத்தில்நடைபெறும்.

வடமாநிலக் கல்வி அதிபதி திரு வி. சுந்தரலிங்கத்தின் தலைமையில் நிகழும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி. சங்கரலிங்கம் பரிசுகள் வழங்குவார்.

## இவர்கள் அனுதாபம் உண்மையானல்..

பருத்தித்துறை, செவ் 'தமிழரசுக்கட்சியும் தமிழ்க் காங்கிரசும் சிறுபான்மைத் தமிழர் விஷயத்தில் அனுதாபம் உடையரென்பது உண்மையானல், சிறுபான்மைத்தமிழர் குறிப்பிடக்கூடியளவு தொகையாகவுள்ள வட்டாரங்களில் அவர்களையே உள்ளூராட்சிசபைகளுக்குப் போட்டியின்றி அனுப்ப வேண்டும்' எனசிறுபான்மைத்தமிழர்மகாசபை செயலாளர் திரு. எஸ். செல்லையா கனுவில் சனசமூக நிலையப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். திரு: வீ. தங்கமணி தலைமையில் கூட்டம் நடந்தது.

## தபால் அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன் கொடிகாமம் உப தபால் நிலையத்தை தபால் நிலையத் தரத்திற்கு உயர்த்தித் தரும்படி கோரும் பிரேரணை ஒன்று தபால் அமைச்சருக்குக் கொடிகாமம் தமிழரசு வாலிபமுன்னணியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள.



பயிர்த் தொழிலின் அதிசய கண்டுபிடிப்பு ....

# 'அல்கதீன்' குழாய்



பிற உற்பத்திப் பொருள்களும் இப்பணிகளையெல்லாம் செய்தல் கூடும். ஆனல், அல்கதீன் கூடுதலாகச் செய்வது என்ன? பயிர்த் தொழிலில் எல்லா வகையிலும் முன்னேற்ற வழியில் முன் நிற்பதுதான்.

நீர்பாய்ச்சும் பொறியியலாளர், பயிர்த் தொழிலாளர், தோட்ட முதலாளிகள், கொள்வனவு செய்யும் முகவர்கள் ஆகிய எல்லோருமே குறைகள் உண்டா எனக் கூர்ந்து அவதானிப்பவர்கள். அவர்கள் யாவருமே இன்று கிடைக்கும் குழாய்களுள் மிகச் சிறந்தவை என ஒரே முகமாக நீர் பாய்ச்சும் பணிகளுக்ெனத் தேர்ந்தெடுத்திருப்பது அல்கதீன் குழாய்களே. நீளம், குறைந்த எடை, இலகுவான இணைப்பு முறை, மலிவு, இடமாற்றத்துக்கு எளிமை.................... அத்துடன் எளிதில் நொறுங்காத்தன்மை ஆகிய இவைதான் காரணங்கள்.

'அல்கதீன்' - குழாய்களுள்ளே முதன்மையானது.

CIC கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிற்றெட்.

தபால் பெட்டி 352 - கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க யோசனைக்கு மேலும் பல அரபுநாடுகள் ஆதரவு

## இஸ்ரேல் இன்னும் முடிவு எடுக்கவில்லை

### அம்மானில் கொரில்லாக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

கெய்ரோ, ஜுலை 28

மேற்காசிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்த யோசனைகளை மேலும் சில அரபு நாடுகள் ஆதரித்துள்ளன. ஏற்கனவே ஐக்கிய அரபுக் குடியரசு, அமெரிக்க யோசனைகளை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. ஐக்கிய அரபுக் குடியரசைத் தொடர்ந்து ஜோர்டான், சூடான், லெபனுன் போன்ற நாடுகளும் அமெரிக்க யோசனைகளை ஏற்றுக் கொள்ள முடிவுசெய்துள்ளன. ஆனுல் சிரியாவும், ஈராக்கும் அமெரிக்க யோசனைகளை ஏற்க மறுத்து விட்டதுடன் குறையும் கூறியுள்ளன.

சிரியாத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் தமது சொந்தப் பிரதிநிதியொருவரை டமாஸ்கஸுக்கு அனுப்பியிருக்கிருர்.

**இஸ்ரேலுக்கு நிக்ஸன் செய்தி**

அமெரிக்க யோசனைகளை அரபு நாடுகள் பல ஏற்றுக்கொண்டும், சில நிராகரித்துமுள்ள அதேவேளையில் இஸ்ரேல் மந்திரிசபை இன்று மீண்டும் கூடி இந்தயோசனைகள் பற்றி ஆலோசிக்கத் தொடங்கியது.

இஸ்ரேலியர் அமெரிக்காவிடமிருந்து அதன் யோசனைகள்சம்பந்தமாகமேலும்சில விளக்கங்களைக் கோரியிருப்பதாகவும் விளக்கம் கிடைக்கும் வரை இஸ்ரேல் மந்திரிசபை எதுவித முடிவும் எடுக்காதென்றும் கூறப்படுகின்றது. என்றுலும் இஸ்ரேல் மந்திரி சபை அமெரிக்க யோசனைகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் நிலைமை முன்னேறிக்கொண்டிருப்பதாக அமெரிக்க வட்டாரங்கள் ஆருடம் கூறுகின்றன.

இதே சமயம், அமெரிக்க அதிபர் நிக்ஸன், இஸ்ரேலிய பிரதம மந்திரிக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் ஒன்று எழுதிருக்கும் செய்தியும் வெளியாகியிருக்கின்றது. ...

...ளருக்கு முழுமையாகத் தெரிவிக்கப்பட்டது என்று அந்த அதிகாரி கூறினுர். ஆனுல் மத்தியகிழக்கு பற்றி அமெரிக்காவின் நிலை குறித்தும், அண்மையில் யு எஸ் தெரிவித்த யோசனை குறித்தும் தலைமைச் செயலாளருக்கு யு எஸ் வெளி உறவுத் துணை அமைச்சர் ஜோசப் ஜே ஸிஸ்கோ ''விரிவான விளக்கம்'' கொடுத்ததாக அவர் தெரிவித்தார். அமெரிக்க அதிபரைச் சந்திப்பதற்குச் சற்று முன்பு யுதாண்ட் - ஸிஸ்கோ சந்திப்பு நடைபெற்றது.

யு எஸ் யோசனையில் ''உருப்படியான அடிப்படைகள் உண்டு; அமெரிக்காவின் நிலையில் அது ஒரு பயனுள்ள முன்னேற்றம்'' என்று யுதாண்ட் கருதுவதாக ஐநா அதிகாரி கூறினுர். அமெரிக்கா யோசனையும் அண்மையில் ரஷ்யா தெரிவித்துள்ள ஒருயோசனையும் இரு நாடுகளும் முன்பு மத்திய கிழக்கு குறித்து மேற்கண்ட நிலைகளிலிருந்து வேற்றுமையைக் குறைத்துள்ளதாக யுதாண்ட் நினைக்கிருர் என்று அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

---

காலமான முன்னுள் போர்த்துக்கல் பிரதமர்

# சலாசருக்கு ராஜ மரியாதை

லிஸ்பன், ஜுலை 28

நேற்றுக்காலமான முன்னுள் போர்த்துக்கல் பிரதம மந்திரி திரு. அன்டோனியோ டி ஒலிவிரா சலாசாருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக போர்த்துக்கல் அரசாங்கம் நான்குநாள் விடுமுறை அறிவித்திருக்கின்றது. திரு சலாசார் 36 ஆண்டு காலம் போர்த்துக்கலின் சர்வாதிக ரிபோல் ஆட்சி நடத்திவந்தார்.

---

## 'ஆசிரியர்களுக்கு விடிவு ஏற்படும்'

பருத்தித்துறை, செவ்.

''ஆசிரியர்கள் நான்கு சுவர்களுக்குள்ளும் அடங்கியிருக்கும் அரசாங்க ஊழியர்களாக இருந்த காலம் மலையேறிவிட்டது. அவர்கள் அரசியல், சமுதாய வாழ்வில் கலந்து, நாட்டின் ...

---

## கலை கலாச்சாரத்திற்கு பிரதமர் அளித்துள்ளமதிப்பு

### வட்டுக்கோட்டையில் உதவி அமைச்சர்

சங்கானை, செவ்

கலை கலாச்சாரம் என்பவை இன மத வேறுபாட்டையொழிக்கும் அதே நேரத்தில் மறுமை இன்மை இன்பத்திற்கும் இவை உதவியாயிருக்கின்றன'' என கலாச்சார உதவி மந்திரி திரு. சோமவீர சந்திர சிறி வட்டுக் கோட்டை சிவன் கோவில் மேலைவீதியில் அவ்வூர் மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்:

இராசவைத்தியர் திரு. அ க குமாரசாமி தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது: தொடர்ந்து பேசிய கலாச்சார மந்திரி குறிப்பிட்டதாவது:- 1949-ம் ஆண்டு ஆட்சியிலிருந்த அரசாங்கம் கலை கலாச்சாரம் போன்றவற்றிற்கு ஒரு வித ஊக்கமும் அளிக்கவில்லை. இதனுல் இந்நாட்டு மக்களுக்குசுதந்திரத்தின்பலாபலன் கிட்டவில்லை 1956ம் ஆண்டு காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா கலாச்சாரத்திற்கென பிரத்தியேக திணைக்களத்தை அமைத்து அதன் வளர்ச்சிக்கு இடம் கொடுத்தார். தற்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கலை கலாச்சாரத்திற்கென ஓர் பிரத்தியேக அமைச்சை அமைத்து கலைக்குத் தகுந்த இடத்தைக் கொடுத்துள்ளார்.

---

## 'நாடக மன்றங்களுக்கு அரசாங்கம் உதவவேண்டும்'

### ப. ச. முன்னுள் தலைவர் பேச்சு

சங்கானை, செவ்.

தற்போதைய அரசாங்கம் நாடகக்கலையை அபிவிருத்திசெய்வதற்குச் சிரத்தை கொண்டுள்ளது. ஆர்வமும், திறமையும் பரவலாகச் சிதறுண்டநிலையில் இருக்கின்றன. இதனை ஒருமுகப்படுத்தி நாடகக் கலையில் ஆர்வம் காட்டும் மன்றங்களுக்கும் கழகங்களுக்கும் போதிய உற்சாகமும் ஆதரவும் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனையும் விட பொதுமக்களாகிய ரசிகப்பெருமக்களும் சினிமாவில் காட்டும் நாட்டத்தில் ஐம்பது விகிதமாகிலும் நமது கலைஞர்கள் பால் காட்டவேண்டும். நாடகக் கலை இதன் மூலம் நம் நாட்டில் மேலும் வளர்ச்சியுறும்.''

சங்கானை பட்டினசபை முன்னுள் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் பாலமுருகன் நாடகமன்றத்தாரின் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

---

## பல்கலைக்கழகத் தேர்வில் மாணவர்தொகைகுறையாது

கொழும்பு. செவ்வாய்

''பல்கலைக்கழகங்களில் மாணவர்களைத் தெரிவுசெய்வதில் வழமைபோல் நடந்து கொள்ளவும். மாணவர்களைக் குறைக்கவேண்டாம்'' என்று கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் பல்கலைக்கழக துணைவேந்தர்களிடம் தெரிவித்துள்ளார். மருத்துவ விஞ்ஞான, [illegible] யியல்துறை துணைவேந்தர்கள் அமைச்சரைச் சந்தித்துப் பேசியபோது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.


கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறைக்கு 150 பேரையும் [illegible] தனைப் பொறியியல் து[illegible]க்கு 165 பேரையும் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும். [illegible] பெறுபேறுகளைப் பொறுத்து [illegible] மாணவர்களை அனுமதிக்கும்படியும் அ[illegible] கூறியுள்ளார்.

பரீட்சை ...

---

# வல்லரசுகள் பற்றிய அச்சத்தை உடைக்க வேண்டும்

## சூ - என் - லாய் சொல்லுகிறுர்



பாரிஸ், ஜுலை 28

பெரும்வல்லரசுகள் பற்றி மற்றநாடுகள் மத்தியிலிருந்து வரும் அச்சத்தை உடைத்தெறிய வேண்டும் என்று சீனப் பிரதமர் சூ-என்-லாய் கூறியிருக்கிருர்

பிரெஞ்சு டெலிவிஷன் காட்சியொன்றில் தோன்றிய திரு. சூ-என்-லாய், வல்லரசு நாடுகள் இதரநாடுகளில் வைத்துள்ள தம்படைகளை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தினுர்.

**பேச்சுநடத்த தயார்**

இதே வேளையில் சீனுவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு தயாராய் இருப்பதாக அமெரிக்கா அறிவித்திருக்கின்றது. சமீபத்தில் நடைபெறவிருந்த இந்த இருநாடுகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள். கம்போடியாவுக்குள் அமெரிக்கபடைகள் பிரவேசித்ததைத் தொடர்ந்து ஒத்திப்போடப்பட்டன.

**பிரஞ்சு அணுக் குண்டு**

தெற்கு பஸிபிக்கில் பிரான்ஸ் மேலும் ஒரு அணு குண்டை வெடித்துப் பரிசோதனை நடத்தியிருக்கின்றது. பிரான்ஸ் இம்முறை நடத்தும் அணுகுண்டு சோதனைத் தொடரில் இது 6வது குண்டாகும் மேலும் இரு குண்டுகளை பிரான்ஸ் வெடித்து சோதனை நடத்தவிருக்கின்றது.

---

## 'சோஷலிஸக் கொள்கைக்கும் தமிழரசுக்கும் வேறுபாடில்லை''

திருக்கோணமலை, செவ்

''இலங்கைத், தமிழரசுக் கட்சிக்கும் சோஷலிசக் கொள்கைகளுக்கும்எந்தவித வேறுபாடுமில்லை. தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகள் சோஷலிச அடிப்படையிலே அமைந்திருக்கின்றன. அதனுல் நான் தமிழரசுக் கட்சியிலே இருப்பதில் பெருமைப்படுகின்றேன்''

சோவியத் நட்புறவுச் சங்கத்தின் திருமலைக் கிளை லெனின் 100-வது ஆண்டு விழாவை திருமலை நகர சபை மண்டபத்தில் கொண்டாடியபோது உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர். பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக உபஅதிபர் கே. சிவபாலன் தலைமையில் விழாநடந்தது.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

உலகத்திலே பெரியார்கள் எதற்காக வாழ்ந்தார்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறியவேண்டும். தருமமும் நீதியும் சாகின்றபோது யாரோ ஒரு மகான் உலகில்தோன்றி உலகைக் காப்பாற்றுகின்றுர்.

அதே போன்று தான் மாமேதை லெனின் பிறந்து உலகத்தை ஏகாதிபத்தியத்திலிருந்து காப்பாற்றினுர். மக்கள் மனதிலே லெனினும் அவருடைய தத்துவங்களும் பதியவேண்டும். அவருடைய பாதையில் மக்கள் செல்ல வேண்டும். அப்பொழுது தான் ஒரு புரட்சிகரமான மறுமலர்ச்சி தோன்றும்.

100 ஆண்டுகளுக்கு முன் ரஷ்யா இருந்த நிலைக்கும் இன்று இருக்கின்ற நிலைக்கும்அதிக வேறுபாடுஉண்டு. பொருளாதார கலை கலாச்சார விஞ்ஞான மறுமலர்ச்சி இன்று அங்கு பெருமளவு மலர்ந்திருக்கிறது. லெனினுடைய 1917 ம் ஆண்டுப் புரட்சியின்பின்தான் ரஷ்யா தனது புதிய சகாப்தத்தில் காலடியெடுத்துவைத்தது இப்புரட்சியின்பின் ஏகாதிபத்தியம் ஒழிந்தது. ஜார்வர்க்கம் அழிந்தது. தேசிய ஒருமைப்பாடும் மொழியொற்றுமையும் இன்று எங்கும் நிலாவிவிட்டது. அன்று லெனின் வெற்றி பெற்றதனுல்தான் இன்று உலகத்தில் அநேக நாடுகள் சோஷலிஸப் பாதையில் செல்லுகின்றது அவருடைய ...

---

## செப்டம்பரில் கேரளத் தேர்தல்

திருவனந்தபுரம், ஜுலை 28

கேரளத்தில் அடுத்த செப்டம்பர் 17-ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் இதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

தேர்தல் கமிஷனரின் இந்த அறிவித்தலை மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரியும் முன்னுள் முதல் அமைச்சருமான திரு, நம்பூதிரிபாட்டும், நிஜலிங்கப்பா காங்கிரசும் குறை கூறியுள்ளன.

---

## செழுங்கமலச் சிலம்புச் செல்வி

உடுப்பிட்டி. செவ்.

கரவெட்டி வாணிகலைக் கழக இயக்குநரும் ஈழத்தின் தலைசிறந்த இலக்கண ஆராய்ச்சியாளர்களில் ஒருவருமான பண்டிதர் திரு. க. வீரகத்தி 'செழுங் கமலச் சிலம்புச் செல்வி' என்னும் கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார்.

---

## பணிப் பெண் கைது!

மாவிட்டபுரம். செவ்.

கட்டுவனில் காணுமல் போன வீட்டுப்பணிப் பெண் ஒருவர் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டார்.

கட்டுவனைச் சேர்ந்த திருமதி குமாரசிங்கம் என்ற பெண்தமது வீட்டில் பணிப் பெண்ணுயிருந்த தேவாரணி என்பவர் காணுமல் போய் விட்டதாக காங்கேசன் துறை பொலிஸில் புகார் செய்திருந்தார். இந்த தகவலைப் பொலிசார் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்திருந்தனர்.

கிளிநொச்சிப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பிரஸ்தாப பெண்ணை கிளிநொச்சியில் உள்ள வல்லிபுரம் குமாரசாமி என்பவருடைய வீட்டில் கண்டு ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன.

இதே சமயம், அமெரிக்க அதிபர் நிக்ஸன், இஸ்ரேலிய பிரதம மந்திரிக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் ஒன்று எழுதிருக்கும் செய்தியும் வெளியாகியிருக்கின்றது இக்கடிதத்தில் மேற்காசியாவில் ராணுவ சமபலம் நிலவும் வகையில் அமெரிக்காபார்த்துக்கொள்ளும் என்றும், அமைதிக்கான வக்குறுதிகளைப்பெறு முன்பு இஸ்ரேல் அரபுநிலங்களிலிருந்து விலகிச்செல்லத் தேவையில்லையென்றும் அதிபர் நிக்ஸன் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது

இஸ்ரேலிய உதவிப்பிரதம மந்திரி ஜெருசலத்தில் நேற்று நிகழ்த்திய உரையொன்றின் போது, அமெரிக்க யோசனைகளை இஸ்ரேலியர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்,

# அம்மானில் கொரில்லா ஆர்ப்பாட்டம்

ஜோர்டான் தலைநகரான அம்மானில் நேற்று பாலஸ்தீன விடுதலை இயக்கங்களைச் சேர்ந்த கொரில்லாக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்கள். ஆயிரக்கணக்கான கொரில்லாக்கள் தெருக்கள் வழியாக அணிவகுத்துச்சென்றனர். அமெரிக்க யோசனைகளை ஏற்றுக்கொண்டதற்காக எகிப்திய அதிபர் நாஸருக்கும், ஜோர்டான் மன்னர் ஹுசேனுக்கும் எதிராக கொரில்லாக்கள் கோஷங்களைக் கிளப்பிக் கொண்டுசென்றனர். ஏற்கனவே கொரில்லாக்களுக்கும் ஜோர்டான் அரசாங்கத்துக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறி கொரில்லாக்கள் வீதிகள் வழியாக ஆயுதங்களையும் வெளிப்படையாக எடுத்துச்சென்றுர்கள். அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

## யு. எஸ். திட்டம் உருப்படியானது -யுதாண்ட்

மத்தியகிழக்கு குறித்து அமெரிக்கா மேற்கொண்டுள்ள புதிய முயற்சி, சமாதானத் தீர்வுக்கு ஓர் உருப்படியான நடவடிக்கைஎன்று ஐ. நா. தலைமைச் செயலாளர் யுதாண்ட் கருதுகிருர்.

யுதாண்ட் இசைவுடன் ஐ. நா. அதிகாரி வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அமெரிக்கத்திட்டம் சென்ற மாதம் வெளியிடப்பட்டபோது, அது குறித்து ஐ. நா. தலைமைச் செயலா

முகமாக போர்த்துக்கல் அரசாங்கம் நான்குநாள் விடுமுறை அறிவித்திருக்கின்றது திரு சலாசார் 36 ஆண்டு காலம் போர்த்துக்கலின் சர்வாதிக ரிபோல் ஆட்சி நடத்திவந்தார்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டு அதிலிருந்து சிகிச்சை பெற்றுவந்தார். சலாசார் மரணமாகும் பொழுது அவருக்கு81 வயது அவர் சடலம் ராஜமரியாதைகளுடன் அடக்கம்செய்யப்படவிருக்கின்றது

— —

# சிறிமாவின் ராஜதந்திரம்

## இ- ஜெர்மன்பத்திரிகை பாராட்டு

பேர்லின், ஜுலை 28

இலங்கைக் கூட்டணி அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தை அமுல்நடத்துவதற்கு எல்லா தேசிய ஜனநாயகச் சக்திகளின் ஐக்கியம் அவசியமாகும்'' என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் ''அடிவானம்'' என்னும் உலக விவகார ஏடு எழுதியுள்ளது.

பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் படத்தையும் பிரசுரித்துள்ள இப்பத்திரிகை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேர்தலில் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றிய தெனினும் திருமதி பண்டாரநாயக்கா தனிக்கட்சி ஆட்சி அமைக்கவில்லையென்றும் அது அவரது இராசதந்திரத்தையும் சரியான கூட்டணிக்கொள்கையை அவர் கையாண்டு வருவதையுமே எடுத்துக்காட்டுகிறதென்றும் கூறுகிறது.

திருமதி பண்டாரநாயக்கா சோஷலிஸ்ட் கருத்துக்களைக் கொண்டிருப்பதால் மக்களிடம் அவருக்கு பெரும் செல்வாக்கு உண்டு. ஆகவே அவர் இலங்கையின் தற்போதையப் பிரச்னைகளைத்தீர்க்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிருர் என்று 'அடிவானம்' மேலும் எழுதியுள்ளது.

— —

# பூஜாராதனை ஆரம்பம்

யாழ்ப்பாணம். புதன்

திருப்பணியின் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜஇராஜேஸ்வரி அம்பாள் கோவில் பூஜாராதனைகள் மீண்டும் நடைபெற்று வருகின்றன. யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் திருமுறை இன்னிசைப் பஜனையும்நடைபெறுகிறது.

'' ஆசிரியர்கள் நான்கு சுவர்களுக்குள்ளும் அடங்கியிருக்கும் அரசாங்க ஊழியர்களாக இருந்த காலம் மலையேறிவிட்டது. அவர்கள் அரசியல், சமுதாய வாழ்வில் கலந்து, நாட்டின் அபிவிருத்திக்கு வழிவகுக்கும் தலைவர்கள் என்பதை இன்றைய அரசாங்கம் உணரப்போகிறது.''

இவ்வாறு நாகர்கோயில் மகாவித்தியாலய அதிபராக வரணி மகாவித்தியாலயத்திலிருந்து மாற்றப்பட்ட திரு. வி. தங்கராசாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. வே. நாகநாதன் கூறினர். திரு. கே. ஆறுமுகம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

திரு. தங்கராசா தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்குப் பதிலளித்தார்.

— —

# 'ஒன்றுபட்டால் உரிமைகிடைக்கும்'

கொழும்புத்துறை, செவ்.

''கடந்த ஐந்துவருடகாலமாகத் தேசிய அரசாங்கத்தினல் பெற்றுக்கொள்ள முடியாமற்போன தமிழ்மக்களின் பல உரிமைகளை ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நாம் ஒன்றுபட்டு உழைத்தால் உரிமைகளைப் பெறுவதோடு நாட்டின் பொருளாதார விருத்தியில் சிறந்த ஸ்தானத்தையும் பெற்றுவிடலாம்.''

இவ்வாறு அரியாலை மக்களால் நல்லூர்ப் பிரதிநிதிக்கு அளிக்கப்பட்ட பொதுவரவேற்பின்போது நல்லூர்ப் பிரதிநிதி திரு. சி. அருளம்பலம் தெரிவித்தார்.

அரியாலை வாலிப முன்னணி ஒழுங்குசெய்த இவ்வரவேற்பு விழா, யாழ். மாநகரசபை உறுப்பினரும், சமாதான நீதிபதியுமாகிய திரு. ச. நடராசா தலைமையில் நடைபெற்றது.

— —

# தீர்க்கசுமங்கலிக்கு பதக்கம் பரிசு

கொழும்புத்துறை, செவ்.

அரியாலை மேற்கு அமரர் காசிப்பிள்ளை அரங்கில் நடைபெற்ற இசை, நாடகப் போட்டியில் பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தினரின் 'தீர்க்க சுமங்கலி' முதலிடத்தைப் பெற்றது. காங்கேசன்துறை வசந்த கானசபாவின் 'சத்தியவான் சாவித்திரி' இரண்டாம் இடத்தைப் பெற்றது. இந் நாடகம் முதலிடம்பெற்ற 'தீர்க்கசுமங்கலி'க்கு இரு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

என்றும் அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் பல்கலைக்கழக துணைவேந்தர்களிடம் தெரிவித்துள்ளார். மருத்துவ விஞ்ஞான, கலை, பொறி

# பரீட்சை நடைபெறும்

கோட்டை, செவ்வாய்

இலங்கை நிர்வாகசேவை தரம் நாலுக்குரிய பரீட்சையை ரத்துச்செய்யவோ, பிற்போடப்படவோ மாட்டாதென பொதுநிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார் எனினும் நிர்வாக சேவை அமைப்பில் முற்றாக மாற்றம் ஏற்படுத்துவது பற்றி கவனத்தில் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் சிம்மாசனப் பிரசங்கத்தில் இச்சேவையை திருப்பி அமைப்பதுபற்றி குறிப்பிட்டமையால் இதற்குரிய பரீட்சையை பின்போடுமாறு அல்லது ரத்துச் செய்யுமாறு இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் அமைச்சரைக் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# செல்வச்சந்நிதி உற்சவ ஆலோசனை

வல்வெட்டித்துறை, செவ்.

செல்வச்சந்நிதி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டமொன்று தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. கந்தையா தலைமையில் தொண்டமானாறு கி. மு சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறை காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து, வைத்தியஅதிகாரி டாக்டர் திரு. புவிராஜசிங்கம், சுகாதாரப் பொறுப்பதிகாரி, சுகாதாரப் பரிசோதகர், கிராமசேவகர்கள் திரு. வி. ஜெயவீரசிங்கம், திரு. ஜெயநாதன், பொலிஸ் உத்தியோகத்தர் திரு. பி. சுப்பிரமணியம், இ.போ.ச.அதிகாரிகள், உடுப்பிட்டி கிராமச்சபை உறுப்பினர் திரு. இ. சிவதாஸ், கி.மு. சங்கத் தலைவர், திருவிழா உரிமையாளர் திரு. ஆறுமுகசாமி ஐயர் மற்றும் கோவில் உரிமையாளர்கள், பூசகர்கள், பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் கோவில்பக்தர்களின் நலனை முன்னிட்டு சுகாதாரம், பாதுகாப்பு, நீர்வசதி, போக்குவரத்து, மின்சாரம் என்பன பற்றிய ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தனைப் பொறியியல் துறைக்கு 165 பேரையும் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும். இடமிருப்பதைப் பொறுத்து கலைப்பிரிவு மாணவர்களை அனுமதிக்கும்படியும் அவர் கூறியுள்ளார்.

— —

# ஆலோசனை நடத்தினர்

யாழ்ப்பாணம், புதன்

சமீபத்தில் சித்தன்கேணி கலைநகரைச்சேர்ந்த பிரமுகர்கள் பலர் வட்டுக்கோட்டைக் கிராமச்சபை 5 ம் வட்டார உறுப்பினர் திரு. த. கணபதிப்பிள்ளையுடன் வட்டுக்கோட்டைக் கிராமச்சபைத் தலைவர் திரு நிற்சிங்கத்தைச் சந்தித்து கலைநகருக்கு அவசிய தேவையாக இருக்கும் மிசாரம், வீதித்திருத்தங்கள், வீதிப்பெயர்கள சம்பந்தமாக ஆலோசனை நடாத்தினர். கிராமச்சபைத் தலைவர் தாம் கூடிய கவனமெடுப்பதாக உறுதியளித்துள்ளார்,

கலைநகர் நேருஜி சனசமூக நிலையத் தலைவர் சைவப் புலவர் திரு நா. க. தங்கரத்தினம் ஆசிரியர், செயலாளர் திரு. மு நல்லசேகரம்பிள்ளை, பரிசோதகர் திரு. வே. செல்வநாயகம், திரு. வே. வே. தம்பையா தலைமையாசிரியர், திரு வே கந்தசாமி ஆசிரியர். திரு. வீரசுப்பிரமணியம் திரு. வே, தம்பிராசா சங்கீதபூஷணம் ஆகியோரே மேற்படி கிராமச்சபைத் தலைவரைச் சந்தித்தவர்களாவர்.

— —

# 'இளந்தமிழர் மன்ற' சம்பியன்'

ஊரதீவு, செவ்வாய்

ஊரதீவு இளந்தமிழர் மன்றக்கோஷ்டிக்கும் ஊரதீவு சங்கிலியன் போதனு நிலையத்தினருக்கும் இடையில் தீவுப்பகுதி முன்னுள் எம். பி. திரு. வ. நவரத்தினம் வெற்றிக்கிண்ணத்துக்காக, நடைபெற்ற தாச்சி இறுதிப் போட்டியில் இளந்தமிழர் மன்றக்கோஷ்டியினர் வெற்றிவாகைசூடினர். இளந்தமிழர் மன்றக் கோஷ்டியினர் 7 பழங்களும் போதனு நிலையக்கோஷ்டியினர் 5 பழங்களும் பெற்றனர்.

இளந்தமிழர் மன்றக் கோஷ்டிக்கு திரு. க. மகேந்திரனும், போதனுநிலையக் கோஷ்டிக்கு திரு. ந. இராசதுரையும் தலைமைதாங்கி ஆடினர். மத்தியஸ்தராக திரு. த. நவரத்தினசிங்கம் கடமையாற்றினூர்.

யூனிஸ்ட் கட்சியின் காரியதரியும் முன்னுள் முதல் அமைச்சருமான திரு, நம்பூதிரிபாட்டும், நிஜலிங்கப்பா காங்கிரசும் குறை கூறியுள்ளன.

— —

# தென்வியட்னும் கவலை

சைகோன், ஜுலை 28

சைகோனிலுள்ள இந்தியத் தூதரகத்தின்மீது தென்வியட்னும் மாணவர்கள் நடத்திய தாக்குதல் குறித்து தென்வியட்னும் அராங்கம் கவலை தெரிவித்திருக்கின்றது.

அறிவித்திருந்தனர்.

கிளிநொச்சிப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பிரஸ்தாப பெண்ணை கிளிநொச்சியில் உள்ள வல்லிபுரம் குமாரசாமி என்பவருடைய வீட்டில் கண்டு பிடித்தனர் பணிப்பெண்ணையும் வல்லிபுரம் குமாரசாமியையும் கைதுசெய்த பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர் செய்த போது பெண்ணை இரட்சணியசேனையில் அனுமதிக்கும் படியும் மற்றவரைப் பிணையில் செல்லும்படியும் உத்தரவிட்டு 30-ம் திகதி மீண்டும் ஆஜர் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்

யொற்றுமையும் இன்று எங்கும் நிலாவிவிட்டது, அன்று லெனின் வெற்றி பெற்றதனுல்தான் இன்று உலகத்தில் அநேக நாடுகள் சோஷலிஸப் பாதையில் செல்லுகின்றது அவருடைய வெற்றி உலகத்தினுடைய வெற்றி.

— —

# புராணபடனம்

தாவடி, செவ்

தாவடி ஸ்ரீ கணேச வாசிகசாலை இளைஞர் சங்கத்தின் ஆதரவில் தினமும் இரவில் பெரியபுராணப் படிப்பு நடாத்தப்பட்டுவருகிறது.





தட்டி விட்டதும் இயங்கும் சுலபமான விசையுடைய பீச்சு முனை கொண்டது.

புதிய, பாரமற்ற

ஹேஸ்ப்ரே 350 பீ.டீ.

பீச்சு முனையில் தட்டிவிட்ட மாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை உள்ளதால் வெளியே சிவிறப்படும் மருந்தின் அமுக்கத்தை குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளவுக்குக் கட்டுப்படுத்த ஏதுவாகிறது. இது விசேஷமாக தேயிலையில், பயிர்களுக்குச் சேதம் விளையும் என்ற பயமில்லாமல் களைக் கொல்லிகளை தெளிக்கப் பயன்படுகிறது.

அழுங்கிப் போகாத, துருதடுப்புப் பிளாஸ்டிக்கினால் ஆன $3\frac{1}{2}$ கலன் தாங்கி சௌகரியத்திற்கும் சுலபமாக இயக்குவதற்கும் என்றே உருவானது. பார்வைப் பராமரிக்கத் தேவையில்லை. தொடர்ந்து உச்ச அமுக்கத்தை நிலைபெறச் செய்யலாம்.

உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.

VISION 75/70

HAYLEYS

தயாரிப்பேர்ர்:

ஹேலீஸ் லிமிட்

400, டீன்ஸ் ரோட,

கொழும்பு 10.

தொலைபேசி: 96331


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நம்மையும் நமது குடும்பத்தையும் காத்துவருவது கடவுளே. நாம் அவரது கருவிகளே. இதை உணர்ந்துவிட்டால் நமது கவலையும் மனப் பளுவும் குறையும். நம் எல்லாரையும் கடவுளே இதுவரை காத்துவந்துள்ளார். இனியும் காப்பார் என்ற உணர்ச்சியும் நம்பிக்கையும் நமக்கு ஏற்படும்.

— சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 13-ந் திகதி (29-7-70)


## தமிழருக்கும் இடம்

'ஸ்தல ஸ்தாபன சேவைக் கமிஷன்' எனப்படும் உள்ளூராட்சி அதிகார சபையில் ஒரு தமிழர் கூட நியமனம் பெருதது பற்றி தமிழ்ப் பகுதி உள்ளூராட்சி மன்றங்கள் சில கவலை தெரிவித்துள்ளதுடன் இந்தக் குறையை நிவர்த்தி செய்யுமாறும் கோரியிருக்கின்றன. உள்ளூராட்சி அதிகாரசபையில் மட்டுமல்ல அரசாங்கசேவைக் கமிஷனிலும் ஒரு தமிழரும் இடம்பெறவில்லை. உள்ளூராட்சி அதிகாரசபையிலும் அரசாங்க சேவைக் கமிஷனிலும் தமிழர்களை நியமித்து இந்தக் குறைகளை அரசாங்கம் விரைவில் நீக்குமென்று நம்புவோம்.

கூட்டணியின் சார்பில் ஒரு தமிழர் கூட சென்ற தேர்தலில் தெரிவுசெய்யப்படாத போதிலும், கூட்டணி ஆட்சிபீடத்தில் அமர்வதற்கு பெரும்பான்மைப் பலம் பெற்றிருந்தபோதிலும் அமைச்சரவையில் ஒரு தமிழருக்கும் இடம்கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனும் பெருந்தன்மையுடனும் ஒரு தமிழரை அமைச்சரவையில் நியமித்தது இச் செயல் குறித்து தமிழ்மக்கள் தமது நன்றி கலந்த மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

அமைச்சரவையில் ஒரு தமிழர் இருப்பது குறித்து மகிழ்ச்சியடையும் அதே வேளையில் அரசாங்கசேவையிலுள்ளவர்களினதும் அரசாங்கசேவை நியமனங்களிலும் தமிழ் மக்களின் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும் நேரடியாக அரசாங்க சேவைக் கமிஷனுக்கே இருக்கிறது. தமிழ்மக்களின் நிலையை உணர்ந்தவர்கள் அறிந்தவர்கள் இக் கமிஷனில் அங்கம்வகித்தால்தான் தமிழ்மக்களுக்கு நியாயம் கிடைக்கச்செய்யமுடியும்.

உள்ளூராட்சி அதிகார சபை உள்ளூராட்சிமன்றங்களின் நிர்வாகம், கடமைகளுடன் சம்பந்தப்பட்ட அதிகாரமுள்ள சபை, உள்ளூராட்சி மன்றங்கள்தான் அந்தப் பகுதிகளின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் நேரடியாக ஈடுபடுவன. மக்களின் முன்னேற்றம் உள்ளூராட்சி மன்றங்களின் சேவையில்தான் பெரிதும் தங்கியிருக்கின்றன.

எனவே மக்களின் முன்னேற்றத்துக்கும் அவர்களின் குறைநிறைகளை நேரடியாகத் தெரிந்து நிவர்த்தி செய்யக்கூடிய வையுமான அரசாங்க சேவைக் கமிஷனிலும் உள்ளூராட்சி அதிகாரசபையில் தமிழர்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதே. வகுப்புவாத நோக்கங்கொண்டதென்ற கோரிக்கையென இதைப் புறக்கணித்துவிடாது, குறையை நிவர்த்திசெய்ய அரசாங்கம் முன்வருமென்று எதிர்பார்க்கலாம்.

## மருந்துத் தயாரிப்பு

நமது நாட்டில் கிடைக்கும் மூலிகைகளிலிருந்து இப்போது இறக்குமதி செய்யப்படும் மேற்கத்திய மருந்து வகைகள் சிலவற்றை இங்கேயே தயாரிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இங்குள்ள மூலிகைகளை வெளிநாட்டவர் வாங்கி அதை நவீன முறையில் தயாரித்து ஏதேதோ ... யும் பெற்றுர். அதைத் தொடர்ந்து விரிவுபடுத்துவதற்கு காலன் அவரை விட்டு வைக்கவில்லை.

# இந்திரா காந்தியை எதிர்ப்பது தலைவர் கிரியை எதிர்ப்பதாகும்

இந்தியாவிலுள்ள அரசியல் குழப்ப நிலையைச்சற்றே கவனித்தால் இதையெல்லாம் ஒரு பெண்மணியான இந்திராகாந்தி எப்படித்தான் சமாளிக்கிறுரோ என்று யாருக்கும் திகைப்பளிக்கும். பார்லிமெண்டிலே அவரது கட்சிக்கு பெரும்பான்மை பலமுமில்லை கம்யூனிஸ்ட், தி. மு. க. இவர்களது பலத்தை நம்பியே அவர் ஆட்சி நடத்த வேண்டியுள்ளது.

மெஜாரிட்டிபலம் இல்லாததால் அவர் தமது பதவியைக் காத்துக் கொள்ள கம்யூனிஸ்ட்கட்சி ஆட்டி வைக்கிறபடி ஆடுவதாயும் ரஷ்யாவின் தலையாட்டிப் பொம்மையாகி வருகிறுரென்றும், ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் ஆகவே பழைய காங்கிரஸ், ஜனசங், சுதந்திரா முதலிய கட்சிகள் ஒன்றுசேர்ந்து அவரது ஆட்சியை வீழ்த்த வேண்டுமென்றும் ராஜாஜி முதலியவர்கள் முனைந்திருக்கிறுர்கள்.

பொதுத் தேர்தலில் பொதுமக்களின் அமோகமான ஆதரவைப் பெற்ற இந்திராகாந்தி பிரதமரானுர். பின்னர் ஜனுதிபதி தேர்தல் மீதுதான் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. இந்திராகாந்தி கிரியை ஆதரித்தார். 'சிண்டிகேட்' காங்கிரஸ் சஞ்சீவிரெட்டியை ஆதரித்தது. இந்திராவின் ஆதரவைப் பெற்ற கிரியே ஜனநாயக முறைப்படியான தேர்தலில் வெற்றிபெற்றுர். மக்களின் இந்த முடிவை சிண்டிகேட் காங்கிரஸ் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டு இந்திராவின் தீர்மானமே சரி என்று உணர்ந்து அவர்மீது எழுப்பிய குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்றிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் காங்கிரஸில் பிளவேற்பட்டிராது. சிண்டிகேட்டின் கூற்றின்படி ஜனநாயகத்துக்கும் 'ஆபத்து' ஏற்பட்டிராது.

அப்படியின்றி பொதுமக்களின் தெளிவான தீர்ப்பை அறிந்த பின்பும்கூட இந்திராமீது பழிவாங்குபடலத்தைத் தொடர்ந்து நடத்துவது பழைய காங்கிரஸ் தலைவர்களுக்கு அழகல்ல. மொரார்ஜிதேசாய்மீது இந்திராவுக்கு நம்பிக்கையில்லை தமக்கு நம்பிக்கையில்லாத ஒருவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க இவ்வளவு பெரிய பொறுப்பை வகித்து வரும் ஒரு பிரதமருக்கு ஒரு உரிமை கிடையாதா? தமது மந்திரிசபையில் எவ்வளவோ மாறுதல்கள் செய்துள்ளார். பிடித்ததோ பிடிக்கவில்லையோ எல்லாரும் பிரதமரின் தீர்மானத்தை ஒப்புக் கொண்டு ஒத்துழைக்கவில்லையா? முன்னர் காமராஜ் திட்டப்படி பல காங்கிரஸ் மந்திரிகள் பதவிஇழந்தனரே. அவர்கள் நேருஜிக்கு மாருக போட்டி காங்கிரஸா அமைத்தனர்.

ஜனுதிபதி பதவிக்கு கிரி அவர்களை நியமிக்கப்படாதென்று 'சிண்டிகேட்' தீர்மானித்ததன் காரணம் என்ன? யார் இதற்குப் பொறுப்பு? பொதுமக்கள் 'சிண்டிகேட்' காங்கிரஸுக்கு மாருகத் தீர்ப்பளித்த பின்னராவது, அவர்கள் தங்கள் பெரிய தவறை உணர்ந்து பிரதமர் இந்திராவை எதிர்க்காமல் இருக்கவேண்டாமா? பொதுமக்களின் தீர்ப்புக்கு மாருக ஒரு சில 'தலைவர்கள்' சேர்ந்து கொண்டு பிரதமரைத் தொடர்ந்து எதிர்த்து வருவதுதான் ஜனநாயகமா? அல்லது தேசாபிமானமா? இதைப் பற்றிப் பாரபட்சமற்ற முறையில் சிந்தித்தால், இன்றைய இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள சங்கடமும், குழப்பங்களும் பெரிதும் குறையும். காங்கிரஸும், ஜனநாயகமும் பலப்படும்.

ஜனநாயக சக்திகளெல்லாம் ஒன்ருகச் சேரவேண்டியதைப் பற்றி கிருபாளனியைக் கேட்டபோது அவர் இரு காங்கிரஸ்களும் ஒன்று சேரவேண்டும் என்ருர். சென்னை முதலமைச்சர் கருணுநிதியும் இந்த ஜனநாயக மகத்தான கூட்டிலே சேரும்படி இந்திராவையும் அழைக்கவேண்டும் என்றும் சரியாக யோசனை கூறியிருக்கிருர். 'சிண்டிகேட்' காங்கிரஸ் பிரிந்து பிரதமர் இந்திராவை எதிர்ப்பதால்தான் அவர் கம்யூனிஸ்ட் முதலிய வேறு கட்சிகளின் உதவியை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே சிண்டிகேட் காங்கிரஸ், ஜனுதிபதித் தேர்தல் விஷயமாகத் தாங்கள் செய்துவிட்ட தவறை உணர்ந்து, பொதுமக்கள் அளித்த தீர்ப்பை ஏற்பதாயின், அவர்கள் பிரதமர் இந்திராவைத் தொடர்ந்து எதிர்க்கக் காரணமில்லை. கிரியை அவர்கள் நிராகரித்த காரணம் என்ன என்பதை இப்போதாவது விளக்குவார்களா? இதற்கு யார் மூலகாரணம்? இதைப் பற்றி ஓர் அரசியல் விசாரணை நடத்தினுல் பல உண்மைகள் அம்பலமாகலாம்!

இதைவிட்டு பிரதமர் இந்திராவுக்கு மாருக அவர்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்வது உண்மையில் ஜனுதிபதிக்கும் ஜனநாயகத்திற்கும் மாருகச் செய்யும் கிளர்ச்சியேயாகும் இவ் விஷயமாக இன்னும் பிடிவாதஞ்செய்து, பிரதமருக்கு மாருகக் காரியம் செய்வார்களாயின், பொதுமக்களின் ஆதரவையும், அனுதாபத்தையும் மேலும் அவர்களும், அவர்களுடன் புதிதாகச் சேருபவர்களும் இழக்கவேண்டியதாக இருக்கும். அரசியல் குரோதங்களை மறந்து, மேலான அரசியல் ஞானம் காட்டவேண்டிய சமயம் இது தாங்கமுடியாத பெரும் அரசியல் சுமையைச் சுமந்து வரும் பிரதமர் இந்திராவுக்கு உதவியாக எதுவும் செய்யமுடியாவிடினும், அவருக்கு அதிக இன்னல்களைச் செய்யாமலாவது இருக்க முடியாதா?

ஜனுதிபதித் தேர்தலில் கிரி தோல்வியடைந்திருப்பின், பிரதமர் இந்திரா தலை தூக்கியிருக்கமுடியுமா? கிரி வெற்றிபெற்றுள்ள ஒரு காரணத்தை முன்னிட்டாவது சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர்கள் இதுபற்றிப் புனராலோசனை செய்யப் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர்.

**"பராசரன்"**

## 'சிறுகதை அமைப்பில் புதிய சிந்தனை வேண்டும்'

உரும்பராய், செவ்வாய்

புதிய சிந்தனைகளை புதிய கோணத்தில் காண்பிக்க வல்ல சிறுகதைகளையே தமிழுலகம் இன்று வேண்டிநிற்கிறது. 'வைகறை' ஆசிரியர்விஜயேந்திரனின 'சௌந்தர்ய பூஜை' ஆழமான சிந்தனைகளை உள்ளடக்கிய ஒரு நூல் என்பதனை அதனை ஆழ்ந்து படிப்போர் அறிந்து கொள்ளமுடியும்.

## காளைமாடு களவு

சுழிபுரம், செவ்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த ...பையா பொன்னையா என்பவருக்கு சொந்தமான காளைமாடு ரூபா 350 பெறுமதியானது நேற்று இரவு கள்வர்களால் ... செல்லப்பட்டுள்ளது.

இக்களவு சம்பந்தமாக ...

## இருவாரங்களில்

# அரசியல் திட்ட நகல் வெளியாகும்

கொழும்பு, செவ்வாய்

புதிய அரசியல் திட்டத்தின் விரிவான நகல் ஒன்று இன்னும் இருவாரங்களில் மக்கள் அபிப்பிராயத்தை அறியும் முகமாக வெளியிடப்படவிருக்கின்றது. ... பது பற்றி மக்களின் அபிப்பிராயங்களை அரசாங்கம் அறிய முயற்சி எடுக்கும் என்று தெரிகின்றது.

—

**சுயாட்சிக்கழகம்**

# விவசாயப் புலம்

சிறந்த இனத்து உருளைக் கிழங்கை ஒல்லாந்து தேசத்திலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விதை கிழங்காக விநியோகம் செய்ய அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக தெரிய வருகிறது.

வெளிநாடுகளிலிருந்து உருளைக் கிழங்கு இறக்குமதி செய்தல் கடந்த சில வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்ததை உருளைக்கிழங்கு சாப்பிட்டுப் பழகிய எல்லோரும் அறிவார்கள் நமது நாட்டில் இப்பொழுது உருளைக்கிழங்கு உற்பத்தி அதிகரித்து வருகிறது ஆனுல் நமது தேவைக்கேற்ற கிழங்கு எந்த நேரத்திலும் கிடைப்பதரிது அன்றியும் உள்ளூர் கிழங்குகள் பருமனிலும் மாப்பிடிப்பிலும் சுவையிலும் வெளிநாட்டு கிழங்குகளுக்கு குறைந்தவையே இக்குறையை நிவர்த்தி செய்ய நல்ல இன விதை கிழங்குகளை வெளிநாடுகளிலிருந்து தருவித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வரவேற்க வேண்டியதே.

சென்ற வருடம் இதே நாட்களில் யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க விற்பனவு கடையிலும் சிலதனிப்பட்ட கடைகளிலும் உருளைக் கிழங்கு விற்கும் பெட்டிகள் சிலவற்றைக் கண்டேன் அவற்றில் 'விதை உருளைக் கிழங்கு, ஒல்லாந்தில் உற்பத்தியானது' என்ற எழுத்துக்கள் காணப்பட்டன. விதை கிழங்காகவந்தது எப்படி கடைகளில் விற்பனைக்கிருக்கிறது, என்று ஆச்சரியமுண்டாயிற்று விதை கிழங்குக்கென்று அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்டவை எப்படியோ, எவ்விதமாகவோ வியாபாரிகளுக்கும் கிடைக்கும்படி ஆகிவிட்டதென்று தீர்மானித்தேன்.

இந்தவருடம் இறக்குமதி செய்யப்படும் விதை கிழங்கு சில நிபந்தனைகளின் பேரிலேயே விவசாயிகளுக்கு வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சிறந்த இன உருளைக்கிழங்கின் உற்பத்தி இந்நாட்டில் அதிகரிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் விதை கிழங்குகளை விலை கொடுத்து வாங்கும் அரசாங்கம், அவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதில் நிபந்தனைகள் வேறு விதிக்க வேண்டுமா என்று யோசிக்கத் தோன்றிற்று. ... டம் கடைகளில் விதை கிழங்கு தோன்றியது இதனுல் தானே?

யாழ்ப்பாணத்தில் உருளைக் கிழங்குஉற்பத்தி செய்வோர் மூன்று நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமாம் ஒன்று சணல் பயிரிட்ட நிலங்களில் மட்டுமே உருளைக்கிழங்கு பயிரிடவேண்டும் இரண்டு அரசாங்கத்திடம் மட்டுமே உரத்தையும் களை கொல்லிகளையும் பூச்சி கொல்லிகளையும் வாங்கவேண்டும் மூன்று அரசாங்க வெளியீடான 'கமத்தொழில் விளக்கம்' என்ற மும்மாத சஞ்சிகையை எல்லோரும் வாங்க வேண்டும்.

சணல் பயிரிட்ட நிலங்களில் உருளைக்கிழங்கு பயிரிடுவதால் அதிக நன்மை உண்டு என்று அரசாங்கம் கருதுகின்றது இருக்கலாம் ஆனுல் முன்பு போல சணலுக்கு யாழ்ப்பாணத்தில் மதிப்பில்லை: ஏனென்ருல் அதனுல் வருமானம் குறைவு முன்பு சணல் கொட்டை குதிரைகளுக்கு நல்லதீனி சணல்நார்வலைபின்னஉதவும் இப்பொழுது இங்கேகுதிரைகள் இல்லை பின்னல்வலைக்கு பதில் நைலோன் வலை வந்துவிட்டது ஆகையால் கமக்காரர் சணலைக் காட்டிலும் கூடியவருமானம்தரும்வேறு பயிர்களை செய்கிருர்கள் உருளைக்கிழங்குக்காக சணல் பயிரிடும் என்று நிர்ப்பந்திக்கலாமா?

அரசாங்கம் கொடுக்கும் உரத்தையே உபயோகிக்க வேண்டுமென்று நிபந்தனையிடுவதும் முறையல்ல. சில கமக்காரர், செயற்கை உரத்தை விடதொழுஉரமே உருளைக்கிழங்குக்கு சிறந்ததென்று நினைக்கலாம்.

மூன்ருவது நிபந்தனை மிகவும் வேடிக்கையானது. 'கமத்தொழில் விளக்கத்'தில் பயிர்ச்செய்கை, பழச்செய்கை, காய்கறி, ஆடு, மாடு, கோழி, என்ற எத்தனையோ விஷயங்கள் வரும் அவை எல்லாவற்றிலும் உருளைக்கிழங்கு பற்றியும் இருக்குமா? இருந்தாலும் எல்லா கமக்காரரும் அதை விரும்பி வாங்குவார்களா? எல்லோரும் அதில் தரப்படும் யோசனைகளைத்தான் பின்பற்ற வேண்டும் என்று ஏன் நிர்ப்பந்திக்கவேண்டும்?

பல வழியாலும் கமக்காரருக்கு ஊக்கமும் உதவியும் அளித்து உற்பத்தியைப் பெருக்க கடமைப்பட்டிருக்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கும் மூலிகைகளிலிருந்து இப்போது இறக்குமதி செய்யப்படும் மேற்கத்திய மருந்து வகைகள் சில வற்றை இங்கேயே தயாரிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இங்குள்ள மூலிகைகள், செடிகளைக் கொண்டு மருந்துகள் தயாரிப்பதற்கான திட்டமொன்றை உருவாக்குமாறு கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. டி. பி. சுபசிங்கா தமது அமைச்சு உத்தியோகத்தர்களைக் கேட்டிருக்கிறார். மேற்கத்திய மருந்துகளை இங்கு தயாரிப்பதற்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு உதவுவதற்கு முன் வந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். பயனுள்ள நல்ல முயற்சி இது விரைவில் செயல்படுத்தப்படவேண்டுமென்பதே நமது விருப்பம்.

நமது நாட்டில் சிறந்த மூலிகைகளிருக்கின்றன. ஆயுள்வேதம், சித்தவைத்தியம் இங்கு சிறப்புற்றிருந்தது. இந்த மூலிகைகளைக் கொண்டே பலவித கொடிய வியாதிகளையும் ஆயுள்வேத, சித்த வைத்தியர்கள் குணப்படுத்தி வந்தனர். யாழ்ப்பாணத்தில் பிரபல வைத்தியர் ஒருவர் மூலிகைகளிலிருந்து தயாரித்த தமிழ் மருந்துகளை நவீன முறையில் 'கப்ஸியூல்களாக' வும் வேறு நவீன முறைகளிலும் தயாரிக்கத் தொடங்கி அதில் வெற்றி தொடர்ந்து விநியோகப்படுத்துவதற்கு காலன் அவரை விட்டு வைக்கவில்லை.

இங்குள்ள மூலிகைகளை வெளிநாட்டவர் வாங்கி அதை நவீன முறையில் தயாரித்து ஏதேதோ பெயர்களைச் சூட்டி நமக்கே அதிக விலையில் விற்று வருகின்றார்கள். இந்த நிலை மாறி நமது நாட்டில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு நாமே மருந்துகளைத் தயாரிப்பதாயின் வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை எதிர்பார்க்கவேண்டியிராது. அத்துடன் மருந்துகளுக்காக நமது நாட்டுப் பணமும் வெறுமனவில் வெளியே போய்ச் சேராது.

இவ் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வீட்டமின் 'ஏ'. 'பி' வில்லைகளையும் இங்கேயே தயாரிக்க முடியும். மூலிகைகள் மற்றும் மூலப் பொருட்கள் இங்கே தாராளமாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. அவற்றைச் சரியாகப் பயன்படுத்தவும் நவீனப்படுத்தவும் நமது மூளை பலத்தையும் ஆள் பலத்தையும் செலவிட்டால் போதும் இதுவரை ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கங்கள் இதில் அக்கறை செலுத்தத் தவறிவிட்டன. இப்போது மேற்கொள்ளப்படும் முயற்சி விரைவில் வெற்றியளிக்கவேண்டுமென்பதே நமது விருப்பம்.

## தீவுப்பகுதிப் படகுச் சேவை

தீவுப் பகுதியின் படகுச் சேவையை அரசாங்கம் பொறுப்பேற்று நடாத்த வேண்டுமென்ற தீர்மானம் யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீவுப் பகுதிப் படகு சேவை பற்றி யாழ் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதோ, விவாதிப்பதோ இதுதான் முதற்தடவையல்ல. ஆட்சிமன்றத்திலும் இதர இடங்களிலும் கூடத் தீவுப்பகுதிப் படகுச் சேவை பற்றிப் பேசாத நாளேயில்லை என்றும் சொல்லலாம். ஆனாலும் நிலைமை சீர்திருந்தியதாகச் சொல்வதற்கில்லை. தீவுப்பகுதிப் படகுச் சேவை தீராத பிரச்னையாகவுள்ளது.

இதை எப்படித் தீர்ப்பது? இதுதான் கடந்த பல வருடங்களிலும் ஆராயப்பட்ட விஷயம். பொது மராமத்துப் பகுதியினர் தீவுப்பகுதிப் படகுச் சேவையை மேற்கொள்ள வேண்டுமென்றும் தேசிய மய சேவைகள் அமைச்சு அதைப் பொறுப்பேற்க வேண்டுமென்றும் பல தடவைகளிலும் பலராலும் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது, ஆயினும் இதுவரை எதுவும் செயல்படவில்லை.

மக்கள் பிரச்னைகளை நன்கு அறிந்துள்ள-அறிந்துகொண்டு அவற்றுக்குத் தீர்வுகாண விழையும்— மக்கள் அரசாங்கத்தில் போக்குவரத்து அமைச்சை பொறுப்பேற்றுள்ள திரு. லெஸ்லி குணவர்த்தன, யாழ்ப்பாணத்தையும் தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களையும் தெரியாதவரல்லர். யாழ் மாவட்ட இணைப்புக்குழுவின் தீர்மானம் விரைவில் செயல்படுமென்று தீவுப்பகுதி மக்கள் மட்டுமல்லாமல் தீவுப்பகுதிக்குத் தென்னிலங்கையிலிருந்து வரும் மக்களும் எதிர்பார்ப்பார்கள்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மூலகம் இன்று வேண்டி நிற்கிறது. 'வைகறை' ஆசிரியர் விஜயேந்திரனின 'சௌந்தர்ய பூஜை' ஆழமான சிந்தனைகளை உள்ளடக்கிய ஒரு நூல் என்பதனை அதனை ஆழ்ந்து படிப்போர் அறிந்து கொள்ளமுடியும்.

இப்படியான புரட்சிகர கதைகளை நாம் வரவேற்பதன்மூலம் மேன்மேலும் இவைபோன்ற நூல்கள் படைக்கப்படுவதற்கு வழி வகுத்தவர்களாவோம். இவ்வாறு விஜயேந்திரன் எழுதிய 'சௌந்தர்ய பூஜை' என்ற சிறுகதைத் தொகுதியினை காங்கேசன் துறை பாலர் பாடசாலையில் வெளியிட்டு வைத்த திரு. தா சண்முகநாதன் குறிப்பிட்டார்.

நயவுரை நிகழ்த்திய பண்டிதர் சி. வேலாயுதம் சொல் ஆளுகைத் திறனுக்கும், ஆழமான கலைப்பார் வைக்கும் இந்நூல் நல்ல சான்றாகுமெனக் குறிப்பிட்டார்.

சைவப் புலவர் சு செல்லத்துரையின் தலைமையில் விழா நடந்தது.

## நீர்ச் சுழியில் சிக்கி மரணம்

விஸ்வமடு, செவ்

தாமரை இலை பறிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீர்ச்சுழியில் அகப்பட்டு பரிதாபமரணமடைந்த சம்பவம் நேற்று பரந்தனில் நடைபெற்றது.

பரந்தன் குமாரபுரத்தைச் சேர்ந்த சுமதிபாலா என்ற 18 வயது இளைஞனே மரணத்துக்குள்ளானவர்.

சுமதிபாலா மூன்று நண்பர்களுடன் தாமரை இலைகளைப் பறிப்பதற்குக் குளத்தில் இறங்கி நீந்தியதாகவும், நீர்ச்சுழியில் அகப்பட்ட அவர் சைகையின் மூலம் நண்பர்களுக்கு ஆபத்தை தெரிவித்தாராயினும் அவர்கள் வருவதற்குள் மூச்சுத் திணறி மரணமானார் என்றும் மரண விசாரணையின்போது தெரிய வந்தது.

அவருடன் சென்ற மற்றிருவர்களையும் பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர்.

...தம்பையா பொன்னையா என்பவருக்கு சொந்தமான காளைமாடு ரூபா 350 பெறுமதியானது, நேற்று இரவு கள்வர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இக்களவு சம்பந்தமாக சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## விவசாயப்படை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளும் சமுகமளித்திருந்தனர்.

நீர்ப்பாசன இலாகாவும், காணி இலாகாவும் சேர்ந்து நாட் கூலியில் வேலையாட்களைபோட சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அனுமதியை பெற வேண்டுமென்றும், இதன்மூலம் இவ் வேலைகள் சீக்கிரம் நடைபெற வழி பிறக்குமென்றும் பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கிளிநொச்சி எம் பி திரு ஆனந்தசங்கரி கூறியதாவது: கிளிநொச்சி தொகுதியில் காணி ஸ்தானங்களை அதிகரிக்கவேண்டும். அத்துடன் மிருகவைத்திய பிரிவு கிளிநொச்சியிலும், துணுக்காயிலும் தனித்தனியாக இயங்க வழிசெய்ய வேண்டும். விஸ்வமடு படித்தவாலிபர் திட்டத்தில் கிழங்கு, மிளகாய்உற்பத்தியில் அதிக முன்னேற்றம் காணப்படுவதால், இதற்கு மேலும் ஊக்கமளிக்க வேண்டும்.

வடபகுதியில் வெங்காய உற்பத்தி 1 மடங்கிலிருந்து 4 மடங்காக அதிகரித்துள்ளதாக வடபகுதி வெங்காய உற்பத்தியாளர் சங்க தலைவர் திரு. என். ரி. சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

வடபகுதியில் வெங்காயக் கூடுகள் பின்னும் வேலைகள் பத்துமடங்காக அதிகரித்துள்ளது. குறிப்பாக நெடுந்தீவு மக்கள் 22,000 வெங்காயக்கூடு பின்னுகின்றனர். ஆனால் இவர்கள் பின்னும் கூடுகளை சங்கம் வாங்குவதில்தாமதமேற்பட்டுள்ளது. இதனால் வெங்காயக்கூடுகள் பழுதடைகின்றன. இக்கூடுகளில் அனுப்பப்படும் வெங்காயத்தை வாங்குவதற்குத் தயங்குகின்றனர். பழுதடைந்த கூடுகளில் வரும் வெங்காயம், பழுதடைந்திருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கின்றனர்.

விற்பனை இலாகா தனிப்பட்ட வியாபாரிகளுடன் போட்டியிட்டு மக்களுக்கு நல்ல முட்டைகளை மலிவாக வழங்கவேண்டுமென திரு. ஏ. ஜி ராஜசூரியர் கூறினார்.

(கு. வி. ம.)

கொழும்பு, செவ்வாய்

புதிய அரசியல் திட்டத்தின் விரிவான நகல் ஒன்று இன்னும் இருவாரங்களில் மக்கள அபிப்பிராயத்தை அறியும் முகமாக வெளியிடப்படவிருக்கின்றது.

இத்தகவலை அரசமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்தார்

புதிய குடியரசு ஒரே ஆட்சிமன்ற சபையைக் கொண்டதாக விருக்கவேண்டுமா அல்லது நாட்டின் அதிகாரங்களெவையும் மக்களால் தெரிவு செய்யப்படும் குடியரசுத்தலைவரிடம் விடப்படவேண்டுமா என்பது பற்றி மக்களின் அபிப்பிராயங்களை அரசாங்கம் அறிய முயற்சி எடுக்கும் என்று தெரிகின்றது.

## மாங்குளம் ...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

வழ: ஐயையோ என்று சத்தம்போட்டு ஓடிவிட்டார்? -நான் எழும்பினதும் வில்லியம் காட்டுக்கத்தியால் என் தலையில் வெட்டினார். அப்போது 2-ம்எதிரி பொன்னையாவை வெட்ட அவர் ஓடினார்

வழ: வாடியைவிட்டு நீர் போகும்போது யாராவது வெட்டினாரா? -1-ம் எதிரி வில்லியம் வெட்டினார்

வழ: திரும்பி வெட்டினாரா? -ஆம்

வழ: என்னத்தால் வெட்டினார்? -காட்டுக்கத்தியால்

வழ: இன்ஸ்பெக்டரிடம் பொன்னையாவின் பின்னால் போக பியரத்ன திரும்பி வெட்டினார் என்றீரா? -பியரத்ன வெட்டவில்லை

வழ: இன்ஸ்பெக்டருக்கு அப்படி சொல்லவில்லை?

—இல்லை

வழ: லாம்பை யாராவது எடுத்ததைக்காணவில்லையா?

- இல்லை

வழ: மற்ற வாடிக்குப் போகும்போதுலாம்பு தொங்கவிடப்பட்டிருந்தது? ஆம்

வழ: இரண்டு எதிரிகளும் உம்மை தேடவில்லை என்றீர்?- ஆம்.

வழ: இன்ஸ்பெக்டர் ஒரு மணி நேரம் எதிரிகள் தேடியதாக சொன்னீரா?- லாம்பை எடுத்து வாடியைச் சுற்றிப் பார்த்தார்கள் என்றேன்.

வழ: நீர் நித்திரையால் எழும்ப முன் காயம் ஏற்படவில்லை?- 3 காயங்கள் ஏற்பட்டன.

வழ: யார் வெட்டினார்கள்?- வில்லியம்.

வழ: படுக்கையிலிருந்து எழும்பிய பின் தலையில் வில்லியம் வெட்டினார்?- ஆம் முதலில் தலையிலும், பின் காலிலும், கையிலும் வெட்டினார்.

வழ: 1-ம் எதிரி தான் வெட்டினார்?-ஆம்

(விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது)

## சுயாட்சிக்கழகம் கண்டனம்

ஊரதீவு, செவ்வாய்

"அரசியல் நிர்ணய சபை மூலம் இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களை படுகுழியில் தள்ள அரசாங்கம் முன்வந்துள்ளது. இதையேற்றதன் மூலம் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை நட்டாற்றிலே, தமிழ்த் தலைவர்கள் விட்டுவிட்டார்கள். இதை தமிழர் சுயாட்சிக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது" எனக் கூறும் தீர்மானத்தை தமிழர் சுயாட்சிக் கழகம் அதன் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது. கழகப் பணிமனையில் இக் கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. வ. நவரத்தினம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"சிங்கள இனத்தோடு இணைந்து இரண்டறக் கலப்பதிலே ஆட்சேபனை இல்லையென்றால் அரசியல் நிர்ணய சபையிலே ஒத்துழைப்பது சரி. தமிழினம் தொடர்ந்து தனியினமாக வாழவிரும்பினால் அரசியல் நிர்ணயசபையிலே எந்தவிதமான தொடர்பும் வைத்திருக்கக் கூடாது. அதன் பலாபலன் எதுவாயிருந்தாலும் தூர நின்றுகொள்வதே நமக்குப் பயனளிக்கும்."

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை-மனுவேற்பிள்ளை

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இளைப்பாறியதலைமையாசிரியர் வேலுப்பிள்ளை மனுவேற்பிள்ளை காலமானார். இவர் 'அக்கம்மா' அமுதவல்லியின் கணவரும் மேஜர் பரம்சோதி டாக்டர் ஜெகசோதி, சரவணமுத்து (இளைப்பாறிய லிகிதர்) வழக்கறிஞர் விவேகானந்தர், கணக்குப் பரிசோதகர் செல்வரத்தினம், கனகசூரியர் (வைத்திய இலாகா) தர்மரெத்தினம் கூட்டுறவு) வழக்கறிஞர் நவரத்தினம் ஆகியோரின் பாசமனுமாவார் பூதவுடல் இன்று மாலை 5 30 மணிக்கு சிங்கமகாலிலிருந்து புறப்படும்.

2174

எண்ணத்துடன் விதை கிழங்குகளை விலை கொடுத்து வாங்கும் அரசாங்கம், அவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதில் நிபந்தனைகள் வேறு விதிக்க வேண்டுமா என்று யோசிக்கத் தோன்றிற்று.

விதைக்கென்று வாங்கி விவசாயிகள் அவற்றை கூடுதலான விலைக்கு கடைக்காரர்களுக்கு விற்றுப்போடுகிறார்களோ? சென்ற வரு...

...யோசனைகளைத்தான் பின்பற்ற வேண்டும் என்று ஏன் நிர்ப்பந்திக்கவேண்டும்?

பல வழியாலும் கமக்காரருக்கு ஊக்கமும் உதவியும் அளித்து உற்பத்தியைப் பெருக்க கடமைப்பட்டிருக்கும் அரசாங்கம் இப்படியான நிபந்தனைகளை விதிப்பது முறை தானா?

— கலப்பை.

## விவசாயப்படை முகாம்கள் கூட்டுஸ்தாபனமாகும்?

— நமது நிருபர் கே. கணபதிப்பிள்ளை —

விஸ்வமடு, செவ்வாய்

அகில இலங்கையிலும் உள்ள விவசாயப்படை முகாம்கள் அனைத்தும் மாற்றியமைக்கப்பட்டு அடுத்த மாத நடுப்பகுதியிலிருந்து 'தேசிய அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்' என்ற பெயரில் செயல்படுமென அறியப்படுகிறது.

தேசிய அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள், மற்றும் கூட்டுத்தாபனத்தில் நடக்கும் நிர்வாக முறைக்கு அமையவே செயல்படுத்தப்படுவார்களென்றும், ஆனால் மேற்படி கூட்டுத்தாபனத்தின் வேலைத் திட்டங்கள், நிர்வாக முறைகள் போன்ற அனைத்தும் இராணுவத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெறலமென்றும் தெரிய வருகிறது. பெரும்பாலும் விவசாயப்படை வீரர்களுக்கு அடுத்த மாத நடுப்பகுதிக்குள் வேலைக்கு அழைப்புக் கிடைக்கலாமென்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விவசாயப்படை முகாம்கள் கூட்டுத்தாபனமாக்கப்பட்டால், வீரர்களின் உணவுப்பிரச்னை அவர்கள் பொறுப்பிலேயே விடப்படுமெனக் கூறப்படுகிறது.

## தம்பிரான் சுவாமிகள் வருகை

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இம்மாத இறுதியில் ஒருமாதகால தலயாத்திரை மேற்கொண்டு இலங்கை வருகின்றார்.

## அம்புலன்ஸ் வசதியில்லை

புதுக்குடியிருப்பு, செவ்.

முல்லைத்தீவு வைத்தியசாலையிலுள்ள அம்புலன்ஸ் வாகனம் பழுதடைந்துள்ளமையால் நோயாளிகளை வேறு வைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்லமுடியாதநிலையேற்பட்டிருக்கின்றது

வைத்தியசாலை அதிகாரிகள் இதுபற்றி மேலிடத்துக்கு அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று தெரிகிறது.

## கருத்தரங்கு

மாவிட்டபுரம், செவ்.

கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகரும் உடும்பராய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபருமான திரு. ஏ. வைத்திலிங்கம் அடுத்த மாதம் முதலாம் திகதி சுன்னாகம் பட்டினசபை விளையாட்டரங்கில் ஆராய்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுவார்

## அறிவித்தல்

'ஈழநாடு' காரியாலய நிருபராகக் கடமையாற்றிய திரு. எஸ். திருச்செல்வம் 7-2-70-ந் திகதி தொடக்கம் 'ஈழநாடு' சேவையிலிருந்து விலகிக் கொண்டாரென்பதையும் அவருக்கும் 'ஈழநாடு' அலுவலகத்துடன் இப்போது தொடர்பில்லையென்பதையும் அறியத் தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
"ஈழநாடு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org